Registered as a news paper. இலவசப் பிரதி பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
ரா ம் கோ
(சி-653)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 பங்குனி 05 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 முஹறம் 15 (19.03.2003) புதன்கிழமை இதழ் :167

# கண்காணிப்புக்குழுவினருக்கு கூடுதல் அதிகாரம் கிடைக்கும்!

## போர்நிறுத்தத்தை உறுதிப்படுத்த இருதரப்பும் இணக்கம்

(ரோக்கியோ)

**கடற்பகுதியிலோ, அல்லது தரையிலோ எதிர்காலத்தில் அரச படைகளுக்கும் புலிகளுக்குமிடையே முறுகல்நிலை ஏற்படுவதைத் தடுக்குமுகமாக, போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு கூடுதல் அதிகாரம் கொடுப்பதற்கு, நேற்று ஜப்பானில் நடைபெற்ற ஆறாம் கட்ட சமாதானப் பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்டுள்ளது.**

இதுதொடர்பாக விரிவாக ஆராயும் பொருட்டு, இன்னும் மூன்று வாரங்களுக்குள் அரசு - புலிகள் - கடற்படையினர் கலந்துகொள்ளும் முத்தரப்புச் சந்திப்பொன்றை, கிளிநொச்சியில் நடாத்துவதற்கும் நேற்றைய சமாதானப் பேச்சுக்களில் அரசு - புலிகள் தரப்பினர் இணக்கம் கண்டுள்ளனர். இந்த இணக்கநிலை, பேச்சுக்களின் ஆரம்பக் கட்டத்தில் எட்டப்பட்டதைத் தொடர்ந்து, இரு தரப்பினரும் உயர் பாதுகாப்பு வலய விவகாரம் மற்றும் களுத்துறைக் கைதிகளின் வழக்குகளை வட - கிழக்கிற்கு மாற்றுவது தொடர்பான விடயம் என்பன குறித்து ஆராய்ந்தனர்.

நேற்றைய பேச்சு சுமார் மூன்று மணிநேரம் நீடித்தது.

### விண்ணாணம் விநாசியர்



படைக்கே நிதியில்லையெண்டா, எல்லாம் இழந்து நிக்கிற சனம் எங்கயப்பா போகும்...?

## 6 ஆம் கட்டப் பேச்சுக்கள் ஹெக்கோன் நகரில் ஆரம்பம்!


தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் அரசுப் பிரதிநிதிகளுக்குமிடையிலான, 6 ஆம் கட்ட சமாதானப் பேச்சுவார்த்தையின் முதற் சுற்றுப் பேச்சுவார்த்தை நேற்று ஜப்பானில் நடைபெற்றது.

ஜப்பான் தலைநகர் ரோக்கியோவிற்கு மேற்கே உள்ள ஹெக்கோன் நகரில் அமைந்துள்ள பிரின்ஸ் ஹோட்டேலில், நேற்று முற்பகல் 12 மணிக்குப் பேச்சுக்கள் ஆரம்பமாகின.

தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் - தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம், தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், மூத்ததளபதி கேணல் கருணா, திருமதி அடேல் பாலசிங்கம் (10 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சு முன்னேற்றத்தில் பாலா ஆர்வமாகவுள்ளார்

### ஜப்பானியத் தூதுவர் யசுசி அகாஷி பாராட்டு



அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தைகள், முன்னேற்றகரமான பாதையை நோக்கிச்செல்ல வேண்டுமென்பதில், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மிகுந்த ஆர்வமாக இருப்பதாக, ஜப்பானிய விசேட தூதுவர் யசுசி அகாஷி தெரிவித்துள்ளார்.

நேற்றுமாலை அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துக்கும் ஜப்பானிய விசேட தூதுவர் யசுசி அகாஷிக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்பே, யசுசி அகாஷி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அண்மையில் சர்வதேசக் கடற்பரப்பில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் மீதான தாக்குதல் குறித்து கடும் ஆட்சேபம் தெரிவித்தோம்!

### செய்தியாளர்களிடையே அன்ரன் பாலசிங்கம்

திருகோணமலைக்கு அப்பால் - ஆழ்கடலில் அதாவது, சர்வதேசக் கடற்பரப்பில் நிகழ்ந்த துயரமான சம்பவம் குறித்து, மிகவும் கடுமையான ஆட்சேபனையை இன்றைய (நேற்று) பேச்சுவார்த்தையின்போது நாம் தெரிவித்தோம் என, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், பேச்சுக்களின் முடிவில் நேற்று தமிழ் ஊடகவியலாளர்கள் மத்தியில் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கும்போது -

இந்தச் சம்பவம் சர்வதேச கடற்பரப்பில் - அதாவது, திருமலைக்கு அப்பால் 220 கடல்மைல் தொலைவில் நிகழ்ந்திருக்கின்றது. ஆகவே, இந்த சர்வதேசக் கடற்பரப்பில் எமது வர்த்தகக் கப்பலைத் தடுத்து, அதன் மீது தாக்குதலை நடத்தி அழித்தது - போர் நிறுத்த உடன்பாட்டை மட்டுமன்றி சர்வதேசக் கடல் நியமங்களையும் மீறுவதாக அமைகிறதென அரச தரப்புக்கு எடுத்துவிளக்கினோம்.

அத்துடன் - இரண்டாவதாக, அரசாங்கம் சொல்லுகின்ற 185 கடல் மைல் என்ற தூரம், பல தடவைகள் முரண்பாடான தூரங்களுக்குப் பின்னர் - இறுதியாக அவர்களது பொருளாதார வலயத்திற்குள் நடந்ததாகச் சொல்லுவதற்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதனை நாம் நிராகரித்தோம்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சிறான் அமைப்பின் செயற்பாடு இன்றைய பேச்சில் ஆராய்வு

இன்று ஜப்பானில் அரசுக்கும் புலிகளுக்குமிடையில் நடைபெறும் பேச்சுவார்த்தையில் - புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிறான் அமைப்பின் செயற்பாடுகள் பற்றியும், அதன் நடவடிக்கைகளை விரிவுபடுத்துவது தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.

அத்துடன், ஜூன் 10 ஆம் திகதி ஜப்பானில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில், எவ்வாறான கோரிக்கைகளை முன்வைப்பது என்பது பற்றியும், இன்று ஆராயப்படவுள்ளது எனத் தெரிய வருகின்றது.

இன்றைய பேச்சுவார்த்தையில், ஜப்பானிய சிறப்புத் தூதுவர் யசுஷி அகாஷியும் கலந்துகொள்ளவுள்ளார்.

## படையினருக்கு இடம்; அரசிடம் நிதியில்லை!

(ரோக்கியோ)

உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து வெளியேறும் படையினருக்கு, இடங்களை ஒதுக்கிக்கொடுப்பதற்கு அரசிடம் போதிய நிதி இல்லையென, நேற்றைய பேச்சுக்களில் கூறப்பட்டதாக அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

இது தொடர்பாக ஒரு திட்டத்தையும் அரசு வழங்கியுள்ளது. இதுகுறித்து இன்று ஆராயப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.



நேற்றைய பேச்சுக்களில் பங்கேற்ற புலிகள் தரப்பினர் மற்றும் அரச தரப்பினரையும் - நோர்வே தரப்பைச் சேர்ந்த வெஸ்பேர்க், ஹெல்கிசன், சொல்ஹெய்ம் ஆகியோரையும் படங்களில் காணலாம்.

SERENDIB AIRLINE யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021-2223916, 0777-517019, 01-505632, 074-612656, 01-390128.
(சி-626)

# மணற்காட்டுப் பகுதியில் மலத்தியோன் விசிறும் பணி

(நெல்லியடி)

மணற்காட்டுப் பகுதியில் உள்ள மக்கள் வாழ்விடங்களை அண்டிய பகுதிகளில், மலத்தியோன் விசிறும் பணி நாளை மறுதினம் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

இப்பகுதியில் தற்பொழுது 200 குடும்பங்கள் வசிக்கின்றன. இவற்றில் பெரும்பாலான குடும்பங்கள், நீண்டகாலத்துக்குப் பின்னர் வன்னியிலிருந்து மீளக்குடியேறியுள்ள குடும்பங்களாகும்.

இந்நிலையில் அவர்களின் வாழ்விடங்கள் நீண்ட காலமாகப் பாவனையில் இல்லாதிருந்தமையால், நுளம்புப் பெருக்கம் அதிகமாக இருப்பதாகவும், இதனாலேயே இந்தப் பணி அவசர அவசரமாக மேற்கொளளப்படுவதாகவும் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி ஞானசுதன் தெரிவித்தார். (13)

# கடற்தொழிலாளருக்கு அடையாள அட்டை

(யாழ்ப்பாணம்)

குருநகர் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினூடாக, 989 கடற்தொழிலாளர்களுக்கு அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படுகின்றன.

ஜே - 67, ஜே -68, ஜே -69, ஜே - 70, ஜே -71, ஜே-72 ஆகிய பகுதிகளைச் சேர்ந்த, 1600 கடற்தொழிலாளர்கள் அடையாள அட்டைக்காக விண்ணப்பித்திருந்தபோதிலும் முதலாம் கட்டமாக 989 கடற்தொழிலாளர்களுக்கே, கடற்கரை வீதியிலுள்ள சங்கப் பணிமனையில் வைத்து அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

அடுத்த கட்டமாக மிகுதி அடையாள அட்டைகளும் விநியோகிக்கப்படும் என சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.


## மலிவு விற்பனை

**20% முதல் 50% வரை**

**புதுக்கணக்குப் போடவிருப்பதால்**

பாடசாலை மாணவர்களுக்கான புத்தகங்கள், மருத்துவம், கணினி, பொறியியல், இந்திய பிரபல எழுத்தாளர்களின் நாவல்கள் போன்றன மலிவு விலையில் விற்பனையாகின்றது. ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

(சி-687)

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**

**212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**



## இதயபூர்வமான நன்றிகள்

**1996 ஆம் ஆண்டு மே மாதம் 8 ஆம் திகதியிலிருந்து 2003 மார்ச் மாதம் 18 ஆம் திகதிவரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதில் துணைவேந்தராகவும், துணைவேந்தராகவும் பதவி வகித்த காலத்தில் எனது பணியைச் சிறப்புற நிறைவேற்றுவதற்கு எல்லா வழிகளிலும் ஒத்துழைப்பை நல்கிய பல்கலைக்கழகச் சமூகத்தினர், யாழ்ப்பாணக் கல்விச் சமூகத்தினர், யாழ்ப்பாணச் செயலகப் பதவியணியினர், கட்டடத் திணைக்களப் பதவியணியினர், இதர அரச அரச சார்பற்ற நிறுவனங்கள், பொது அமைப்புக்கள், பல்வேறு துறைகளையும் சேர்ந்த இந்நாட்டுப் பொதுமக்கள், குறிப்பாக தமிழ் பேசும் மக்கள் ஆகியோருக்கு எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.**

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கும், குறிப்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் அமரர் பேராசிரியர் திலகரத்தினா அவர்கள் என்னை இப்பதவிக்கு சிபார்சு செய்து இப்பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியில் தனியான அக்கறை செலுத்தி அதன் தேவைகளை நிறைவேற்றியமைக்காகவும் இச்சந்தர்ப்பத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

எனது துணைவேந்தர் பதவிக்காலம் முடிவுற்றபோதும், முழு நேரப் பல்கலைக்கழக புவியியல் பேராசிரியராக எனது பணி தொடரும்.

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
2003.03.17.

(சி-694)



## சிறு விளம்பரம்

### தேவை

மினித் திரையில், எலக்ரோணிக் துறையில் அனுபவம் உள்ள ஒருவர் தேவை. திறமைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும். உடன் நேரில் வரவும். புஸ்பாமினி, நவாலி வீதி, ஆனைக்கோட்டை. (286)



**ராஜா** யாழ்ப்பாணம்.

20 ஆம் திகதிவரை
சரத்குமார், மீனா, விஜயகுமார், வடிவேல் நடித்த

**மாயி**

நேரம்:- 10.30, 2.30, 6.30 மட்டும்
21 முதல் பகவதி (சி-628)



**நிறைஞ்சனாஸ்** சங்கானை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
பிரபு, வைஜயந்தி நடித்த
**வண்ணத்தமிழ் பாட்டு**
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 மணி காட்சி
**RUSH HOUR - 2** (சி-627)


## இன்றைய நாள் இனிய நாள்

**19-03-2003 - புதன்கிழமை**

| | | |
|---|---|---|
| மேடம் | :- | காரிய விக்கினம், இனசன விரோதம், உறவினரால் கவலை, நற்குண விருத்தி. |
| இடபம் | :- | தாரசுகத் தடை, உற்சாகமின்மை, தொழில் குறைவு, தேகசுகக் குறைவு. |
| மிதுனம் | :- | சத்துரு வெற்றி, நன்மதிப்பு, பெரியோர் மதிப்பு, சிநேக லாபம். |
| கர்க்கடகம் | :- | நேத்திர ரோகம், பயனற்ற பிரயாசம், வீண்பழி கேட்டல், மனச் சோர்வு. |
| சிங்கம் | :- | வயிறு, மார்பில் வலி, வாக்குக் கலகம், கோபமிகுதி, சிநேகிதரால் கவலை, இல்லச்சிறப்பு. |
| கன்னி | :- | சந்தோஷ மிகுதி, நன்மதிப்பு, லட்சுமீகரம், இல்லச்சிறப்பு, சிநேக லாபம். |

**பிரபல சோதிடர்**
**எஸ். குகநேசன்**

| | | |
|---|---|---|
| துலாம் | :- | சந்தோஷமிகுதி, புதிய ஸ்தானம், பொதுசன மதிப்பு, வெளியூர் பிரயாணம். |
| விருச்சிகம் | :- | காரிய வெற்றி, நன்மதிப்பு, இல்லச்சிறப்பு, சமாதான வாழ்வு. |
| தனு | :- | காரிய விக்கினம், குடும்ப விரோதம், பிரயாணக் கஷ்டம், வாகன நஷ்டம். |
| மகரம் | :- | பிரயாசை மிகுதி, பெரியோர் மதிப்பு, தொழில் சிறப்பு, குடும்ப சந்தோஷம். |
| கும்பம் | :- | உஷ்ணசுரம், விரும்பியவை தடைப்படுதல், வாக்குக் கலகம், கெட்ட சகவாசம். |
| மீனம் | :- | ஊக்க மிகுதி, காரியசித்தி, மனமகிழ்ச்சி, புத்திர சுகம், இனசன மதிப்பு. |





யாழ்ப்பாணத்தில் முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட

**"அன்னை நாகா புட் சிட்டி"**

**இன்று கோலாகலமாக திறந்து வைக்கப்படுகிறது!**

**175, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

தொ. பே. : (021) 2225515,
(021) 2225223.

FLEX GRAPHIC

**யாழ்ப்பாணத்தில் தரமான பொருட்களை வழங்குவதில் நாம் பெருமையடைகிறோம்.**

KEELLS
லக்ஸ்பிறே
Nilkamal
Fa
SPERRYS
Janet
Johnson-Johnson

(சி-693)

## இலங்கையரை பாதுகாப்பாக வெளியேற்றத் திட்டம்

ஈராக்கில் யுத்தம் ஏற்பட்டால் வளைகுடாவில் தங்கியுள்ள இலங்கையரைப் பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கான விசேட திட்டங்கள் தயார்நிலையில் இருப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

வளைகுடாவில் சுமார் ஒன்றரை இலட்சம் இலங்கையர்கள் பணியாற்றுவது குறிப்பிடத்தக்கது.

## வீதி விபத்தில் இளைஞர் காயம்


(யாழப்பாணம்)

மோட்டார் சைக்கிள்- காருடன் விபத்துக்ககுள்ளானதில் இளைஞன் ஒருவர் காயமடைந்தநிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் காலை அரியாலை- மாம்பழம் சந்தியில் நடைபெற்ற இந்த விபத்தில் கொழும்புத்துறையைச் சேர்ந்த ஆறுமுகம் சத்தியராஜ் (வயது 16) என்பவரே காயமடைந்தவராவார். (ச)

# இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தில் நோர்வேயின் தலையீடு அதிகரிக்கிறது!

## முன்னாள் பிரதமர் எச்சரிக்கிறார்



விக்கிரமநாயக்கவின் படத்திற்கு முன்பாக ஒரு இராணுவச் சிப்பாய்

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் நோர்வே அரசாங்கத்தின் தலையீடு அதிகரித்திருப்பதாகவும், புலிகளுக்கு தமிழீழம் உட்படத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க நோர்வே தீவிரமாக முயன்று வருவதாகவும் கடுமையாகக் குற்றஞ்சாட்டியுள்ளார் முன்னாள் பிரதமரும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்க.

மத்துகமவில் இடம்பெற்ற பேரணியொன்றில் உரையாற்றும்போதே, அவர் நோர்வே அரசாங்கத்தின் மீது கடுமையான விமர்சனங்களைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் பேசுகையில்,

இலங்கைப் பிரச்சினையில் மத்தியஸ்தம் செய்யுமாறு நோர்வேக்குப் பொதுஜன ஐக்கிய முன்னணியே அழைப்பு விடுத்தது. இன்று புலிகளுடனும், அரசுடனும் இணைந்துகொண்டு நோர்வே தனது பங்கிலிருந்து விலகியுள்ளது. நோர்வே நடந்துகொள்ளும் விதத்தில் முக்கியமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

உள்நாட்டு விவகாரத்தில் நோர்வேயின் தலையீடு அதிகரித்துள்ளது. புலிகளுக்குத் தமிழீழம் உட்படப் பல்வேறு தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நோாவே முயற்சிசெய்து வருகிறது.

இதற்கு ரணில் அரசாங்கம் கடுமையான எதிர்ப்பைத் தெரிவிப்பதற்குப் பதிலாகப் பார்த்துக் கொண்டிருக்கிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மத்துகமவில் இடம்பெற்ற இப்பேரணியில் பொதுஜன ஐக்கிய முன்னணித் தலைவர்களான அநுரா பண்டாரநாயக்க, தினேஷ் குணவர்த்தன மற்றும் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

(200, 01)

# களுத்துறைக் கைதிகள் மீதான வழக்குகள் மீளாய்வு செய்வதற்கு சட்டமா அதிபர் முடிவு

(கொழும்பு)

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியற்கைதிகளின் வழக்குகளை மளாய்வு செய்வதற்குச் சட்டமா அதிபர் கமலசபேசன் தீர்மானித்துள்ளார்.

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் கைதிகள் மீது தொடுக்கப்பட்டுள்ள வழக்குகள் யாவும் மீளாய்வு செய்யப்படவுள்ளன.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளும் இதில் அடங்குவது குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட ஆயிரம் தமிழ் அரசியற் கைதிகள் மீதான வழக்குகள் போதிய ஆதாரமின்றிக் கைவிடப்பட்டன.

தற்போது களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சுமார் நூறு தமிழ் கைதிகளில், வழக்குத் தாக்கலாகி போதிய சாட்சியங்கள் இல்லாதோரை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதேவேளை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தாக்கலான வழக்குகளைத் துரிதமாக விசாரித்து முடிக்குமாறு, பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா உயர்நீதிமன்றின் ஏனைய நீதிபதிகளைக் கேட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# 87 வீதமான பாட நூல்களே மாணவர்களுக்கு விநியோகம்!

பாடசாலை மாணவர்களுக்கான இலவசப் பாடப்புத்தக விநியோகம் பூர்த்தியடையாமைக்குப் புத்தகங்களை அச்சிடுவதில் ஏற்பட்ட தாமதமே காரணமென்று பாடநூல் வெளியீட்டுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

புத்தகங்களை அச்சிடுவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட நிறுவனம் ஒன்று, குறித்த காலப்பகுதிக்குள் பாடநூல்களை விநியோகிக்கவில்லை என்றும், இதனால் அந்த ஒபபந்தம் ரத்து செய்யப்பட்டு, வேறொரு நிறுவனத்தில் அச்சிடும் பணி இடம் பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வருடத்துக்கான பாடநூல்களில் 87 சதவீதமான நூல்கள் மட்டுமே இதுவரை விநியோகிக்கப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

# தொண்டராசியர் நியமன விண்ணப்பம் இரண்டு வாரங்களில் கோரப்படும்!

## கல்வி அமைச்சு செயலாளர் அறிவிப்பு

தொண்டராசிரியர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்குவதற்கான விண்ணப்பங்கள் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் கோரப்படும் என்று, பாடசாலைக் கல்வி அமைச் சின் செயலாளர் சிறிசேன தெரிவித்தார்.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர் தரப் பரீட்சையில் சித்தி பெற்ற, 1998 ஆம் ஆண்டுவரை சேவையாற்றிய தொண்டராசிரியர்களே இதற்கு விண்ணப்பிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

தொண்டராசிரியர் ஒருவரின் ஒவ்வொருவருட சேவைக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தொண்டராசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் எனக்கோரி வட-கிழக்குப் பகுதிகளிலும், தென்பகுதிகளிலும் ஆர்ப்பாட்டங்களும், போராட்டங்களும் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதையடுத்தே நியமனம் வழங்குவதற்கான விண்ணப்பங்களைக் கோரப் பாடசாலைக் கல்வி அமைச்சு தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகின்றது.

# மட்டக்களப்பு நகரில் பாதுகாப்புத் தீவிரம்

மட்டக்களப்பு நகரப்பகுதியில் படையினர் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியிருக்கின்றனர். அத்துடன், இரவுநேர ரோந்து நடவடிக்கைகளிலும் படையினர் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முக்கியமான இடங்களில் படையினர் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர். மட்டு. வெபர் மைதானத்தில் மாலை 6 மணிக்குப் பின்னர் விளையாடுவதற்குப் படையினர் தடை விதித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## புலிகள் விடுவிப்பு

திருகோணமலைக் கடற்பரப்பில் கடந்தவருடம் நவம்பர் மாதம் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்த ஆறு விடுதலைப்புலிகளும் நேற்று முன்தினம் திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டனர்.

# ஓட்டோ — மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயம்

ஓட்டோவும் - மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் சாரதிகள் இருவரும் படுகாயமடைந்தனர்.

நேற்று முன்தினம் இணுவில் பகுதியில் இடம்பெற்ற மேற்படி விபத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த மகாலிங்கம் ஜெயக்குமார் (வயது 37), கோண்டாவிலைச் சேர்ந்த செல்வரட்ணம் தினேஸ் (வயது 19) ஆகிய இருவருமே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

முன்னேசென்ற மினிவான் ஒன்றினை முந்திச்செல்ல முற்பட்ட மோட்டார் சைக்கிள் சாரதி- எதிரே வந்த ஓட்டோவுடன் மோதியதிலேயே மேற்படி விபத்து நடந்தது. இவ்விபத்தில் இரு வாகனங்களுமே பலத்த சேதத்துக்குள்ளாகின. (82,78)

## ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க

# சர்வஜன வாக்கெடுப்புக்கு உத்தரவிட்டது சட்டத்துக்கு முரணானது எனத் தீர்ப்பு

(கொழும்பு)


புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சர்வஜன வாக்கெடுப்பை நடத்தத் தீர்மானித்து, அதற்கான அறிவிப்பை வெளியிட்டது- சட்டமுறையற்றது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

சர்வஜன வாக்கெடுப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐக்கிய தேசியக்கட்சி நடத்திய 'ஜனபல' என்ற எதிர்ப்புப் பேரணியின் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியபோது அதில் காயமுற்ற சட்டத்தரணி ஒருவர் தாக்கல்செய்த அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கிலேயே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

வழக்கை விசாரித்த உயர்நீதிமன்ற நீதியரசர்கள்- கடந்த 2000 ஆம் ஆண்டு அரசியலமைப்பை உருவாக்குவதற்காக ஜனாதிபதி சந்திரிகா சர்வஜன வாக்கெடுப்பை நடத்தத் தீர்மானித்து அதற்கான அறிவிப்பை வெளியிட்டது சர்வஜன வாக்கெடுப்புச் சட்டத்திற்கு முரணானது என்று தீர்ப்பளித்தனர்.

"ஜனபல' ஆர்ப்பாட்டத்தில் மேற்படி சட்டத்தரணியின் மனித உரிமை மீறப்பட்டிருப்பதாகவும், இதனால் அவருக்கு இரண்டு இலட்சம் ரூபா நஷ்டஈடு வழங்கப்படவேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.







திருகோணமலையில் பிரபலம் வாய்ந்த காளி கோயில் தேர்த்திருவிழாவின் காட்சிகளை முதல் இருபடங்களிலும், தீர்தோற்சவம் உயர்ந்த பாடு கரையில் நேற்று அதிகாலை இடம்பெறுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

படங்கள்: கௌதமன்.

# திக்கம் வடிசாலையில் மீண்டும் உற்பத்தி ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)

கடந்த ஒரு மாதகாலமாக மூடப்பட்டிருந்த திக்கம் வடிசாலை மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது. சீவல் தொழிலாளர்களால் பெருமளவிலான கள் நிலத்தில் ஊற்றப்பட்டதால் ஏற்பட்ட நெருக்கடிநிலையை அடுத்து தொழிற்சாலை மீளத் திறக்கப்பட்டுள்ளது.

திக்கம் வடிசாலையில் உற்பத்தி செய்யப்படும் பனஞ்சாராயத்தை விற்பனை செய்வதில் ஏற்பட்டிருந்த நெருக்கடிநிலையை அடுத்து, இந்த வடிசாலை மூடப்பட்டிருந்தது.

கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக, திக்கம் வடிசாலை இயங்காதிருந்தமையால் சீவல் தொழிலாளர்களிடமிருந்து கள் கொள்வனவு செய்யப்படுவது இடைநிறுத்தப்பட்டிருந்தது.

கள் உற்பத்தி அதிகமான இந்தக் காலத்தில் - கள் கொள்வனவு செய்யப்படாமையால் பெருமளவிலான கள் நிலத்தில் ஊற்றப்பட்டது. இதனால் விரக்தியடைந்த சீவல் தொழிலாளர்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

சீவல் தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட நெருக்கடி குறித்துப் பல தரப்பினரிடமும் முறையிடப்பட்டதை அடுத்து, கடந்த 10 ஆம் திகதி முதல் இந்த வடிசாலை திறக்கப்பட்டு, சாராயம் உற்பத்தி செய்யப்படுவதுடன், கள்ளிலிருந்து பெறப்படும் மதுசாரத்தினை உற்பத்தி செய்யும் நடவடிக்கை இரவு பகலாக இடம்பெற்றுவருகின்றது.

கடந்த மூன்று தினங்களில் மட்டும் ஒரு லட்சத்து 50 ஆயிரம் போத்தல் கள்ளிலிருந்து மதுசாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. (ச,சு)

## கதவு விழுந்ததில் சிறுவன் காயம்

(யாழ்ப்பாணம்)

இரும்புக்கதவில் ஏறி விளையாடிய சிறுவன் மீது கதவு வீழ்ந்ததில் சிறுவன் தலையில் பலத்த காயத்துக்குள்ளாகியநிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் காலை யாழ்ப்பாணம் கற்குள வீதிப்பகுதியில் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த அன்ரனி அலெக்ஸன் (வயது 5) என்னும் சிறுவனே படுகாயமடைந்தநிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (சு)

## மாணவர்களைப் பயன்படுத்தி ஆபாசப்படம் தயாரித்த ஆசிரியர்

மினுவாங்கொடையிலுள்ள பிபிலே என்ற இடத்தில் பாடசாலை மாணவர்களைப் பயன்படுத்தி, ஆபாசப் படம் தயாரித்த ஆசிரியரைப் பொலிஸார் தேடிவருகின்றனர்.

மூன்று பாடசாலை மாணவர்களைக் கோயிலுக்குப் படிக்க வருமாறு இந்த ஆசிரியர் அழைத்துச் சென்று, அங்கு ஆபாசப்படம் எடுத்துள்ளார்.

அயலவர்கள் இது குறித்து முறையிட்டதையடுத்து, பொலிஸார் அங்கு விரைந்தபோது ஆசிரியரும், படம் தயாரித்தவரும் அங்கிருந்து தப்பிவிட்டனர். இவர்களைப் பொலிஸார் தேடி வருகின்றனர். (க)

# சின்னஞ் சிறு செய்திகள்

## மக்கள் நலன்புரிச்சங்க தேசிய பயிற்சிப் பாசறை அடுத்த மாதம்

மக்கள் நலன்புரிச் சங்கமும், படையணிகளும் வருடா வருடம் நடாத்தும் தேசியப் பயிற்சிப்பாசறை நிகழ்வு இவ்வருடம் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ளது.

இம்முறை 35 பாடசாலைகளைச் சேர்ந்த 400 மாணவர்களுக்குமேல், இப்பாசறை நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர்.

கடந்தவருடம் நடைபெற்ற பயிற்சிப்பாசறை நிகழ்வில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி முதலாம் இடத்தையும், கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் 2 ஆம் இடத்தையும், சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி 3 ஆம் இடத்தையும் பெற்றமை குறிப்பிட்டத்தக்கது. (சு)

## கடை தீ வைத்து எரிப்பு!

அராலி கிழக்குப் பகுதியில் பல்பொருள் வாணிப நிலையமொன்று விஷமிகளால் தீ வைத்து எரிக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் அதிகாலை 4.30 மணிக்குக் கடை திடீரெனத் தீப்பற்றி எரிந்தது. பொதுமக்கள் உதவியுடன் தீ அணைக்கப்பட்ட போதும், 6 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளன. (118)

## பூநகரியில் நினைவுத் தூபி அமைப்பு

யுத்தத்தினால் பலியான பொது மக்களின் நினைவாகப் பூநகரியில் தூபியொன்றை அமைப்பதற்கான அடிக்கல்நாட்டு விழா நேற்றுமுன்தினம் காலை 10.30 மணிக்கு நடைபெற்றது.

இதற்கான அடிக்கல்லைப் பூநகரிப் பிரதேசசெயலர் நாட்டி வைத்தார். இந்நிகழ்வில் பூநகரி வலயப் பொறுப்பாளர், வர்த்தகசங்க உறுப்பினர்கள், செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகள், போராளிகள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (34)

## சிறுவனை உருட்டி உருட்டிக் கடித்த நாய்

நாயின் மீது தடுக்கி விழுந்த இரண்டு வயதுச் சிறுவனை, மூர்க்கம் கொண்ட நாய் துரத்திச்சென்று உருட்டி உருட்டிக் கடித்தது. இச்சம்பவத்தில் காயமடைந்த சிறுவன் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை உரும்பிராய் பகுதியில் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த மகேஸ்வரன் தனுஷன் (வயது 2) என்ற சிறுவனே - நாக்கு, தொண்டைப் பகுதியில் கடியுண்டநிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (சு)

## வண்ணை ஆனந்தனுக்கு கூட்டணி அனுதாபம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் பிரசாரப் பேச்சாளர் வண்ணை ஆனந்தன் காலமாகிவிட்டார். இவரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் ஜேர்மனியில் நடைபெற்றது.

இவரின் பிரிவு குறித்துத் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துள்ளனர்.

## கசிப்பு விற்றவர்கள் பொலிஸாரால் கைது

யாழ்.பொலிஸாரின் திடீர் கசிப்பு வேட்டையின்போது - நீண்டகாலமாகக் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வந்த கசிப்பு விற்பனையாளர்கள் இருவர் பொலிஸாரிடம் சிக்கினர்.

திடீர் நடவடிக்கையை மேற்கொண்ட பொலிஸார் உரும்பிராய் பகுதியில் கசிப்பு விற்பனை செய்தவரிடமிருந்து 45 போத்தல் கசிப்பினையும், மடம் வீதிப் பகுதியில் 6 போத்தல் கசிப்பினையும் கைப்பற்றியதுடன் விற்பனை செய்த இருநபர்களையும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். (சு)

# ஜப்பானில் பேச்சு நடப்பதால் அந்நாட்டு உதவி துரிதமாகும்!

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்களையொட்டி நல்ல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதால், ஜப்பான் இலங்கையின் சமாதான முயற்சிகளில் கூடியளவு பங்களிப்பைச் செய்யவுள்ளது.

இதையடுத்து, உதவிவழங்கும் திட்டம் தொடர்பான தீர்மானங்களை ஜப்பானிய அரசாங்கம் எடுத்துள்ளது.

முன்னதாக அரசும், புலிகளும் இறுதியான சமாதான உடன்பாடு ஒன்றுக்கு வந்ததன் பின்னரே பெரியளவிலான திட்டங்கள், அபிவிருத்திக்கு உதவுவதென ஜப்பான் தீர்மானித்திருந்தது.

ஆனால், ஹெக்கோனில் பேச்சு நடைபெறுவதைக் கருத்திற்கொண்டு ஜப்பான் இந்த நிலைப்பாட்டில் மாற்றம் செய்துள்ளது.

இதன் அடிப்படையில் பாரிய அபிவிருத்தித் திட்டங்களுக்கும், வட-கிழக்குப் புனரமைப்புக்கும்- ஜப்பானிய அரசு பெருமளவிலான நிதியுதவியை வழங்க முன்வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## சட்டத்தரணிகள் சங்கத்தின் இலவச சட்ட ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்ட உதவி மன்றத்தின் குழு - தென்பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் வந்திருந்தது. இந்தக் குழுவினரின் இலவசச் சட்ட ஆலோசனைகள் பற்றிய கலந்துரையாடல் கரவெட்டி - வடமராட்சி மகளிர் கல்லூரியில், யாழ்.கிளைத் தலைவர் சாந்தா அபிமன்னசிங்க தலைமையில் நடைபெற்றது. இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் ஏச்.என்.விஜயரத்தினா தலைமையில் இக்குழுவினர் யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெறுதல், தேசிய அடையாள அட்டை பெறுதல், சட்ட ஆலோசனை வழங்கல், தாபரிப்பு விடயங்கள் ஆகியன சம்பந்தமாக இக்கலந்துரையாடலில் விளக்கமளிக்கப்பட்டது.

சட்டத்தரணிகளான எம்.எஸ். காரியப்பர், நிசங்க பெரேரா, அன்னபாக்கியம் சிதம்பரப்பிள்ளை, செல்வி. சந்திரா சிவயோகம் ஆகியோர் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் மக்களுக்குச் சட்ட ஆலோசனைகளை வழங்கினர்.



வடஇலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தினால் வெளியிடப்பட்ட "பத்திரிகையாளன்" காலாண்டு சஞ்சிகை வெளியீட்டு விழாவின்போது முதலாவது பிரதியினை சஞ்சிகை ஆசிரியர் தணிகாசலத்திடமிருந்து யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சீ.வி.கே. சிவஞானம் பெறுவதை முதலாவது படத்திலும், சிறப்புப் பிரதியை மனிதநேய அமைப்புக்களின் தலைவர் பரமநாதன் பெறுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## அவசர கலந்துரையாடல்

யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் நாளை காலை 10 மணிக்கு ஆரியகுளம் புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அனைத்துத் தொண்டர் ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட தொண்டர் ஆசியர் சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார்.

## ஆன்மீக சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள ஆன்மீக நிகழ்ச்சித்தொடரில் - மாணவர்களின் ஆன்மீக உரைகள் மற்றும் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி மாணவிகளின் பக்திப் பாமாலை என்பனவும் இடம்பெறவுள்ளன.



# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

## மாணவர்களுக்கான முன் ஆயத்தப் பயிற்சிகள்





# மாணவர் மலர்

1. கீழே தரப்பட்டுள்ள பூக்களின் பெயர்களை எழுதுக.




1. ............... 2. ............... 3. ....................
4. ............... 5. ...............

2. கீழே தரப்பட்டுள்ள தாவரங்களின் பெயர்களை அட்டவணைக்குள் எழுதுக.

மா, வேம்பு, தென்னை, பலா, கொய்யா, கத்தரி, வெண்டி, தக்காளி, குப்பைமேனி, துளசி, குரோட்டன், பூசனி, பாகல், புடோல், வெற்றிலை, மிளகு, திராட்சை, கொடித்தோடை, மல்லிகை, முல்லை, அறுகு, கோரை, கோழிச்சூடன், தொட்டாச்சுருங்கி, அகத்தி, வாகை, சீதேவியார் செங்கழுநீர், மூக்குத்திப் பூண்டு, முயற்செவிப் பூண்டு, நாணல், துத்திரி.

| மரம் | செடி | கொடி | புல் | பூண்டு |
|---|---|---|---|---|
| | | | | |


3. கீழே தரப்பட்டுள்ள உருக்களுக்கு நிறந்தீட்டுக.




4. பின்வரும் ஆங்கில எழுத்துக்களை ஒழுங்குபடுத்திச் சொற்களாக்குக.

1. U S N D A Y ..............................
2. W N I D O W ..............................
3. S I S E T R ..............................
4. P Y P P U ..............................
5. O F F C I E ..............................


5. கீழே தரப்பட்டுள்ள அளவுச்சாடிகளை அவதானியுங்கள்.




ஒவ்வொரு சாடியிலும் உள்ள நீரின் அளவைக் குறிக்குக.


1. A ........................ 3. B ........................
2. C ........................ 4. D ........................

6. தராசில் வைக்கப்பட்டுள்ள தூரியன் பழத்தின் நிறை யாது?




(..............)

7. கீழே தரப்பட்டுள்ள தராசிலுள்ள பலாப்பழத்தின் நிறை யாது?





(..............)

8. "நான் கதைப் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தபோது..............." என்ற தலைப்பில் ஆறுவாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்கு குறையாது இருத்தல் வேண்டும்.

1. ..................................................
2. ..................................................
3. ..................................................
4. ..................................................
5. ..................................................
6. ..................................................

(தொடரும்)


வி.என்.எஸ்.உதயசந்திரன்
B.A. (Cey) B.Ed(Hons) Dip.in.Ed.

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை

# இரசாயனவியல் - 1

## மாதிரி வினாத்தாள்

1. அனுவெண் பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் தவறானது
   1. அது எப்போதும் ஒரு முழுவெண் ஆகும்.
   2. அனு ஒன்றின் அடிப்படையான இயல்பாகும்.
   3. அனு ஒன்றின் உறுதித்தன்மையைத் தீர்மானிக்கும்.
   4. இரண்டு மூலகங்கள் ஒரே அனுவெண்ணைக் கொண்டிருக்காது.
   5. கருவிலுள்ள புரோத்தன்களின் எண்ணிக்கைக்குச் சமன்.

2. Tin (iv) Dichromate (vi) இன் இரசாயனச் சூத்திரம் எது?
   1. $SnCr_2O_7$ 2. $SnCrO_4$
   3. $Sn(CrO_4)_2$ 4. $Sn(Cr_2O_7)_4$
   5. $Sn(Cr_2O_7)_2$

3. நான்காம் ஆவர்த்தனத்தில் காணப்படுவதும், உயர் ஒட்சியேற்ற எண்ணைக் காட்டக்கூடியதுமான மின்னேரியல்பு மூலகம் பின்வருவனவற்றுள் எது?
   1. Zn 2. Cr 3. Cl
   4. Mn 5. S

4. பின்வருவனவற்றுள் முனைவாக்கமற்ற மூலக்கூறு எது
   1. $No_2$ 2. $NCl_3$ 3. $CO_2$
   4. $SCl_2$ 5. $SO_2$

5. 0.8M $FeSO_4$ கரைசலின் 30 ml உடன் அமில ஊடகத்தில் முற்றாகத் தாக்கமுறத் தேவையான 0.2 M $K_2Cr_2O_7$ கரைசலின் கனவளவு யாது?
   1. 10 ml 2. 2 ml 3. 2.2 ml
   4. 20 ml 5. 40 ml

6. Ca அனுவொன்றின் திணிவு $6.64 \times 10^{26}$Kg . $^{12}C$ அனு வொன்றின் திணிவு $1.99 \times 10^{-26}$Kg. Ca இன் சாரனுத்திணிவு யாது?
   1. 40 2. 40.04 3. 40.4
   4. 40.04 g 5. கணிக்கத் தரவுகள் போதாது

7. சடப்பொருளின் தொடர்ச்சியற்ற தன்மைக்கான ஆதாரமாக அமையாதது எது?
   1. $N_2O_4$ (g) கலவையை அமுக்குதல்
   2. நீருக்குள் $Kmno_4$ பளிங்கை இடல்
   3. மண்ணெண்ணெய்க்குள் NaCl பளிங்கை இடல்
   4. பென்சீனுக்குள் $I_2$ (s) இடல்
   5. எதனோலுக்கு நீர் சேர்த்தல்

8. புரோத்தனைக் கண்டறிந்த விஞ்ஞானி யார்
   1. இரதபோட் 2. கோல்ஸ்ரீன் 3. குருக்ஸ்
   4. J.J.தொம்சன் 5. மேற்கூறிய எவருமல்ல

9. Si எனும் மூலகம் திணிவெண்கள் 28, 29, 30 கொண்ட 3 சமதானிகள் உடையது. இவற்றின் இருக்கை வீதங்கள் முறையே 92%, 5%, 3%. Si இன் சாரனுத்திணிவு யாது
   1. 28 2. 28.11 3. 28.2
   4. 28.10 5. துணிவதற்குத் தரவுகள் போதாது

10. ஒரே நிபந்தனைகளில் 1g $O_2$ வாயு கொள்ளும் கனவளவுக்குச் சமனான கனவளவுடைய $CH_4$ வாயுவின் திணிவு யாது?
    (H - 1, C - 12, O - 16)
    1. 0.25 g 2. 0.4 g 3. 0.5 g
    4. 2 g 5. துணிவதற்குத் தரவுகள் போதாது

11. திணிவுப்படி 28% KOH கொண்ட KOH நீர்க்கரைசல் ஒன்றின் அடர்த்தி 1.26$gml^{-1}$. இக்கரைசலின் செறிவு $moldm^{-3}$ இல்,
    (K - 39, O - 16, H - 1)
    1. 63 2. 6.3 3. 12.6
    4. 0.63 5. 3.15

12. Ag(s), $Cl_2$(g) என்பவற்றைப் பயன்படுத்தி ஆய்வுகூடத்தில் இலகுவாக நிறுவக்கூடிய விதி.
    1. மாறா அமைப்பு விதி
    2. அவகாதரோ விதி
    3. பல்விகிதசமவிதி
    4. இதரவிதரவிகித சமவிதி
    5. மேலுள்ள எதையும் நிறுவமுடியாது.

13. சர்வதேச இரசாயனக் கற்கைகளில் இரசாயனப் பிணைப்பைக் கற்கும்போது பின்பற்றப்படும் ஒழுங்கு.
    1. அயன் பிணைப்பை முக்கியமானதாகக் கருதுதல்
    2. பங்கீட்டுப் பிணைப்பை முக்கியமானதாகக் கருதுதல்
    3. முனைவுப் பங்கீட்டுப் பிணைப்பை முக்கியமானதாகக் கருதுதல்
    4. ஈதல் பிணைப்பை முக்கியமானதாகக் கருதுதல்
    5. ஐதரசன் பிணைப்பை முக்கியமானதாகக் கருதுதல்

14. ஐதரசன் அனுவின் காலல் நிறமாலையில் அதிர்வெண் கூடிய பிரதேசம் எது
    1. லைமன் தொடர் 2. பாமர் தொடர்
    3. பாசென் தொடர் 4. பிரக்கெற் தொடர்
    5. பண்ட் தொடர்

15. 1 $moldm^{-3}$ $K_2CrO_4$ கரைசலுடன் வீழ்படிவைக் கொடுக்கக் கூடிய அயன் எது?
    1. $Mg^{2+}$ 2. $Ca^{2+}$ 3. $Sr^{2+}$
    4. $Ba^{2+}$ 5. மேலுள்ள யாவும் பிழை

16. பொட்டாசியத்தை இயற்கை இருப்பாகக் கொண்ட கானலைட்டு கனிப்பொருளின் இரசாயனச் சூத்திரம் யாது
    1. Kcl 2. KCl, $MgCl_2$
    3. KCl, $MgCl_2.H_2O$ 4. KCl, $MgCl_2.6H_2O$
    5. KCl, $MgCl_2.2H_2O$

17. அமில ஊடகத்தில் 7.9 g $KMnO_4$ உடன் முற்றாகத் தாக்கமுறத் தேவையான $H_2S$ வாயுவின் கனவளவை நியம வெப்ப அமுக்கத்தில் தருக
    1. 1/8 l 2. 28 l 3. 2.8 l
    4. 1.4 l 5. 2 l

18. குளோரினின் வெளிற்றல் செயற்பாடு பின்வரும் எத்தாக்கத்திற்கு உதாரணமாக அமையும்
    1. ஒட்சியேற்றல் தாக்கம்
    2. தாழ்த்தல் தாக்கம்
    3. நடுநிலையாக்கல் தாக்கம்
    4. அமிலகாரத் தாக்கம்
    5. மேற்கூறிய எதுவுமன்று

19. குளோரின் வாயு நீரில் கரைந்து உருவாகும் சேர்வையில் அதன் ஒட்சியேற்ற எண் எவ்வாறாக அமையும்
    1. 0 2. -1 3. +1
    4. 0, -1 5. -1, +1

20. $H_4P_4O_{12}$ அமிலமானது கொண்டுள்ள OH கூட்டங்களின் எண்ணிக்கை.
    1. 1 2. 2 3. 3
    4. 4 5. 5

21. 8.492g $(NH_4)_2$ $SO_4$. $FeSO_4$. $nH_2O$ உப்பானது தூய நீர், ஐதான $H_2SO_4$ கொண்டு கரைக்கப்பட்டு 250 $cm^3$ கரைசல் தயாரிக்கப்பட்டது. இக்கரைசலின் 250 $cm^3$ ஐ நடுநிலையாக்க 0.015 M, 22.5 $cm^3$ $Kmno_4$ கரைசல் தேவைப்பட்டது. nஇன் பெறுமானம் யாது
    1. 6 2. 12 3. 10
    4. 5 5. 2

22. 27°Cயிலும் $0.9997 \times 10^5$ Pa இலும் 1g $Co_2$ வாயுவின் கனவளவு 0.568 $dm^3$ ஆகும். $Co_2$ இன் மூலர் திணிவு யாது? ($gmol^{-1}$இல்)
    1. 44 2. 43 3. 43.95
    4. 44.95 5. 42.5

23. 27°Cயில் உள்ள இலட்சிய வாயு மூலக்கூறுகளின் வேகங்களின் வர்க்கங்களின் சராசரி எந்த வெப்பநிலையில் 50% ஆல் அதிகரிக்கும்.
    1. ஏறக்குறைய 45°C யில்
    2. ஏறக்குறைய 108°C யில்
    3. ஏறக்குறைய 180°C யில்
    4. ஏறக்குறைய 330°C யில்
    5. ஏறக்குறைய 400°C யில்

24. 0.1M HCl கரைசலின் 25 $cm^3$ஐயும் 0.25 M $H_2SO_4$ கரைசலின் 250 $Cm^3$ ஐயும் கலப்பதால் பெறப்படும் கரைசலிலுள்ள $H^+$ அயன்களின் செறிவு.
    1. 0.30 M 2. 0.35 M 3. 0.70 M
    4. 1 M 5. 1.20 M

25. $A_2B_4$ என்னும் சேர்வை பின்வரும் விதத்தில் பிரிகையடைகின்றது.

    $$A_2B_4\ (g) \rightleftharpoons 2AB_2(g)$$

    1 l கனவளவுடைய பாத்திரமொன்றில் $A_2B_4$ இனது 4.60g, 27°C யில் சமநிலையடைந்துள்ளது. பாத்திரத்தில் மொத்த அமுக்கம் 1.478 atm. A, B ஆகியவற்றின் சாரனுத் திணிவுகள் முறையே 14,16 ஆயின் தாக்கத்தின் Kc யாது?
    1. 0.1 $mol\ l^{-1}$ 2. 0.15 $mol\ l^{-1}$
    3. 0.02 $mol\ l^{-1}$ 4. 1 $m0l\ l^{-1}$
    5. 0.01 $mol\ l^{-1}$

26. சார் மூலக்கூற்றுத் திணிவு 76 ஐக் கொண்ட 16 g கரைப்பான் ஒன்றில் 1 g கந்தகம் கரைந்தபோது கரைசலின் ஆவியமுக்கம் 52330 pa ஆகக் காணப்பட்டது. அதே வெப்பநிலையில் தூய கரைப்பானின் ஆவியமுக்கம் 53320 Pa ஆயின் கந்தகத்தின் சார் மூலக்கூற்றுத் திணிவு யாது
    1. 32 2. 128 3. 248.6
    4. 250.6 5. 252.8

27. $Na_2Co_3.10H_2O(s)$ இன் நியம தோன்றல் வெப்பவுள்ளுறை பின்வருவனவற்றில் எத்தாக்கத்துடன் தொடர்புடையதாகும்.
    1. $2Na(s) + C(s) + 13O(g) + 20H(g) \rightarrow Na_2CO_3.10H_2O(s)$
    2. $2NaOH(s) + CO_2(g) + 9H_2O\ (l) \rightarrow Na_2CO_3.10H_2O(s)$
    3. $Na_2O(s) + CO_2(g) + 10H_2O(l) \rightarrow Na_2CO_3.10H_2O(s)$
    4. $2Na(s) + C(s) + 3/2\ O_2(g) + 10H_2O(l) \rightarrow Na_2CO_3.10H_2O(s)$
    5. $2Na(s) + C(s) + 13/2\ O_2(g) + 10H_2(g) \rightarrow Na_2CO_3.10H_2O(s)$

28. எதனோயிக்கமிலம், சோடியம் ஐதரொட்சைட்டு ஆகியவற்றின் நீர்க்கரைசல்களுக்கிடையிலான நியமிப்பை மேற்கொள்ளப் பொருத்தமான காட்டி எது?
    1. புறோமோ பீனோல் நீலம் (3.2 - 4.8)
    2. பராநைத்திரோபீனோல் (5.2 - 7.0)
    3. புறோமோ தைமோல் நீலம் (6.0 - 7.6)
    4. கிறிசோல் சிவப்பு (7.4 - 9.0)
    5. தைமோல்தலின் (9.3 - 10.6)

29. 0.40$gl^{-1}$ செறிவுடைய NaOH கரைசலின் pH 25°Cயில் யாது?
    (Na-23, O-16, H-1)
    1. 12 2. 13 3. 10
    4. 9 5. 11

30. 1M $Zn^{2+}$ கரைசலில் உள்ள Zn தகடும், 1M $Cu^{2+}$ கரைசலில் உள்ள Cu தகடும், இணைக்கப்பட்டு ஓர் மின்கலம் ஆக்கப்பட்டுள்ளது. இக்கலத்தின் மின்னியக்கவிசை யாது?
    ($Zn^{2+}$ / Zn $E^{\theta}$= -0.76 v, $Cu^{2+}$/cu $E^{\theta}$ = 0.34 v)
    1. 1 v 2. -1.1 v 3. +1.1 v
    4. 0.42 v 5. -0.42 v

31. $CH_3\ CH = CH - C(CH_3)\ (Br)\ C_2H_5$ பற்றிய கூற்றுக்களில் பிழையானது.
    1. கேத்திரகணித சமபகுதியமாகும்.
    2. ஒளியியல் தொழிற்பாடு உடையது.
    3. கடுநாட்ட பிரதியீட்டுத் தாக்கத்தில் ஈடுபடும்.
    4. இலத்திரன் நாட்டக்கூட்டல் தாக்கத்தில் ஈடுபடும்.
    5. சேர்வை ஒரு தளத்தில் காணப்படாது.

32. $CH_3 - \overset{\overset{O}{\parallel}}{C} - CH_3 \rightarrow CH_3 - CH_2 - CH_3$ ஆக மாற்றுவதற்குப் பயன்படும் சோதனைப் பொருள்
    1. $Na/CH_3CH_2OH$ 2. $LiAlH_4$ 3. $H_2$/pt
    4. Cu/ 300°c 5. Zn(Hg) / செHCl


33. பின்வரும் அற்கேன்களில் திண்ம சமபகுதியத்தைக் கொடுக்கக்கூடியது எது?
    1. $C_7H_{16}$ 2. $C_6H_{14}$ 3. $C_5H_{12}$
    4. $C_4H_{10}$ 5. $C_3H_8$

34. 1 - butyne, 2 - butyne என்பவற்றை வேறுபடுத்தப் பயன்படும் சோதனைப் பொருள் எது?
    1. புரோமின் நீர்
    2. $NH_3$ / $AgNo_3$
    3. $Br_2$ / $ccl_4$
    4. H+ / $Kmno_4$
    5. 2, 4 - DNPH

35. ⌬– $NH_3HSo_4^-$ என்னும் சேர்வையின் இலசேயின் வடிதிரவத்தில் காணப்படமுடியாத அயன்?
    1. $CN^-$ 2. $H^+$ 3. $OH^-$
    4. $S^{2-}$ 5. $SO_4^{2-}$

36. பென்சீனின் நைத்திரேற்றல் தாக்கமானது பின்வரும் எவ்வகையானது?
    1. சுயாதீன மூலகப் பிரதியீட்டுத்தாக்கம்
    2. இலத்திரன் நாட்டக் கூட்டல் தாக்கம்
    3. இலத்திரன் நாட்டப் பிரதியீட்டுத்தாக்கம்
    4. கருநாட்டக் கூட்டல் தாக்கம்
    5. கருநாட்டப் பிரதியீட்டுத்தாக்கம்

37.





என்னும் சேர்வையின் I.U.P.A.C. பெயர்,
    1. 3 - bromo - 4 - chloro - 2 - phenyl - 4 - pentene
    2. 2 - phenyl - 3 - bromo - 4 - chloro - 4 - pentene
    3. 3 - bromo - 2 chloro - 4 - phenyl pentene
    4. 3 - bromo - 2 - chloro - 4 - phenyl pentene
    5. மேற்கூறிய எதுவுமல்ல

38. பென்சீன் வளைத்தில் அலசன் ஒன்று இணைந்திருப்பின் அதன் இரண்டாவது பிரதியீடு தொடர்பாகப் பொருத்தமானது.
    1. வளையம் ஏவலகற்றப்படும், பிரதியீடு மெற்றா நிலையில் நிகழும்.
    2. வளையம் ஏவலகற்றப்படும், பிரதியீடு ஓதோ, பரா நிலையில் நிகழும்.
    3. வளையம் ஏவலகற்றப்படும், பிரதியீடு மெற்றா நிலையில் நிகழும்.
    4. வளையம் ஏவலகற்றப்படும், பிரதியீடு ஒதோ, பரா நிலையில் நிகழும்.
    5. மேற்கூறிய எதுவுமல்ல.

39. $C_8H_8O$ என்னும் சூத்திரமுடைய அரோமற்றிக் காபனைல் சேர்வைகளின் கட்டமைப்புக்களில் அல்டோல் ஒடுக்கத்தில் ஈடுபடும் கட்டமைப்புக்களின் எண்ணிக்கை?
    1. 1 2. 2 3. 3
    4. 4 5. 5

40. பின்வரும் சேர்வைகளை அவற்றின் அமில இயல்பின்படி ஏறுவரிசைப்படுத்தினால் பெறப்படும் விடை.




$C_2H_5OH$ $H_2O$

(a) (b) (c) (d) (e)

    1. c, a, b, e, d 2. e, d, a, b, c
    3. d, e, a, b, c 4. e, d, b, a, c
    5. d, e, b, a, c

(அடுத்த வாரம் தொடரும்)

சிவ. சிவபாலா
B.Sc., Dip. in Ed., M.Ed.
(ஆசிரியர் - திருக்குடும்பக் கன்னியர்மடம்)

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு.

- திருக்குறள் -

# நமது நோக்கு

## இணக்கமே புத்தியானது !

தொடர்ந்து பல வருடங்களாக நீடித்து - நாடு முழுவதையும் சீரழித்த யுத்தத்தின் பாதிப்புக்களிலிருந்து - பொருளாதார மறுவாழ்வைப் பெறவேண்டியாகிய அவசியமான கட்டத்திலிருக்கும் இலங்கைக்கு, ஜப்பானில் நேற்று ஆரம்பமான பேச்சுக்களை - எப்பாடுபட்டும் சுமுகமாக்கிக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் எழுந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

தற்போது நடைபெற்றுவரும் ஆறாம் கட்டச் சமாதானப் பேச்சுக்களைத் தொடர்ந்து - ஜப்பானில், வருகின்ற ஜூன் மாதமளவில் ரோக்கியோவில் நடைபெறவிருக்கின்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிலேயே - ரணில் அரசாங்கம் தனது அடுத்த நகர்வுகளைச் செய்துகொள்வதிலும், அரசியல் எதிர்ப்புக்களைச் சமாளிப்பதிலும் தங்கிநிற்கின்றது.

அதலபாதாளத்தில் கிடக்கும் இலங்கையின் பொருளாதாரத்தை - அமைதி முயற்சிகளைப் பயன்படுத்தி, அதனை ஒரு வாய்ப்பாகக் கொண்டு கட்டியெழுப்பிவிடலாம் என அரசாங்கம் எதிர்பார்த்தபோதும் - கடந்த ஒரு வருட காலத்திலும், சர்வதேசத்திலிருந்து அதற்கான நிதியுதவிகள் பெரியளவில் கிடைக்கவில்லை.

கடந்த காலங்களில் ஆட்சியிலிருந்த சிங்கள அரசாங்கங்கள் - இனப்பிரச்சினைக்குத் தகுந்த தீர்வினை வழங்க முயற்சிப்பதாகக் கூறிக்கொண்டு - குறிப்பிட்ட காலகட்டங்களில் சர்வதேசத்திலிருந்தும் பெருமளவு நிதியுதவிகளைப் பெற்றும், அதனைப் பின்னர் போருக்காகவே செலவிட்டதான அனுபவங்களின்பேரில் - இம்முறை உலக நாடுகள் சற்றுச் சுதாகரிப்புடன் செயற்படுவதையே காணமுடிகின்றது.

தற்போது நடைபெற்றுவரும் சமாதான முயற்சிகளை வரவேற்கும், ஆதரிக்கும் அதேவேளை - அதிகளவான நிதியுதவிகளைச் செய்வதாயின் - அமைதி நிலை இன்னமும் முன்னேற்றம் காணவேண்டுமென உதவி வழங்கும் நாடுகள் நிலைப்பாட்டைக் கொண்டிருப்பது - இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் - அமைதி முயற்சியில் முன்னேற்றத்தை எட்டவேண்டிய அவசியம் இருப்பதையே வலியுறுத்திச் சொல்கின்றது.

சிதைவுற்றுக்கிடக்கும் பொருளாதாரம் மட்டுமல்ல - தெற்கில் பெருகிவரும் எதிர்ப்பலைகளுக்குத் தாக்குப்பிடிக்க வேண்டுமானால், அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதோடு - பல்லாயிரம் வேலைவாய்ப்புக்களை வழங்கவேண்டிய கட்டாயமும் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிறது.

கொழும்பில் - நாளாந்தம் பொருட்களின் விலைகள் அதிகரிப்பிற்கு எதிராக எதிர்க்கட்சிகள் போராட்டங்களை முன்னெடுத்துவரும் சூழலில், பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு - பொருளாதாரத்தை சுபீட்சமாக்குவதொன்றே அரசாங்கத்திற்குள்ள வழியாகும்.

இந்த வகையில் ஜூனில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டை நோக்கியே, அதனை நம்பியே அரசாங்கம் செயற்படுவதை - பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன அண்மையில் தெரிவித்த கருத்தொன்றின் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது.

அரசாங்கம், தற்போதைக்கு நெருக்கடிகளைச் சந்தித்தாலும், ஜூன் மாதத்திற்குப் பின்னர் தம்மை யாரும் அசைக்க முடியாது என அவர் அண்மையில் கூறியிருக்கும் கருத்து, அரசாங்கத்தின் உட்கிடக்கையையே காட்டுகின்றது.

எனவே, உதவி வழங்கும் நாடுகளைத் திருப்திப்படுத்துவதற்கு, அவற்றின் ஆதரவைத் தக்கவைப்பதற்கு - அமைதி முயற்சிகளைப் பேணவேண்டிய அழுத்தமும் நிர்ப்பந்தமும் அரசாங்கத்திற்கு இருப்பதை மறுக்கமுடியாது.

நிறைவேற்று அதிகாரத்தைக் கையில் வைத்துக்கொண்டு நினைத்தபாட்டுக்கெல்லாம் செயற்படும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், படையினரைக் கட்டுப்படுத்தமுடியாத இயலாத்தன்மைக்கும், தெற்கில் எழுந்துவரும் எதிர்ப்புக்களுக்கும் மத்தியில் - உதவி வழங்கும் நாடுகளின் நல்லபிப்பிராயத்தைச் சேகரித்துக் கொள்வதற்கு - அமைதி முயற்சிகளை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல வேண்டிய கட்டாயம் அரசாங்கத்திற்கு இருக்கின்றது.

இந்த வகையில் - ஜப்பானியப் பேச்சுக்களைச் சுமுகமாக்கிக்கொள்வதோடு, விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளுக்குச் சாதகமான பதிலைத் தர முயல்வதோடு, இணக்கப்பாடுகளை எட்டிக்கொள்வதுமே - அரசாங்கத்திற்குள்ள புத்திசாலித்தனமான நகர்வாக இருக்க முடியும்.

இதன்வழியே - போர்நிறுத்தத்தைச் செம்மையாக்கிக் கொள்வதற்கும், குழப்பங்களைத் தீர்த்துக் கொள்வதற்கும் - அரசாங்கம் சம்மதித்தேயாக வேண்டிய நிலையிலிருப்பதையே ஜப்பான் பேச்சுக்களில் எதிர்பார்க்கலாம்.

# நிரந்தர நியமனம் வழங்கக் கோரி தொண்டராசிரியர்கள் மறியற்போர்

## வலயக்கல்வி அலுவலகங்கள் முன் அடுத்தவாரம் ஆரம்பம்

வடக்கு-கிழக்கிலுள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும்வரை தொடர்ச்சியான மறியல் போராட்டம் அடுத்தவாரம் முதல் நடத்தப்படவுள்ளது. சகல வலயக் கல்வி அலுவலகங்களுக்கும் முன்பாக இந்த மறியல் போராட்டத்தை தொண்டராசிரியர்கள் நடத்தவுள்ளனர்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி அரசசெயலகத்தில் நடைபெற்ற தொண்டர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் நீண்டகாலமாகத் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதில் இழுத்தடிப்பு செய்யப்பட்டு வருகின்றது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், தொண்டர் ஆசிரியர்களுக்கு உடனடியாக நிரந்தரநியமனம் வழங்கக்கோரியும் எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் வடக்கு - கிழக்கிலுள்ள வலயக்கல்வி அலுவலகங்களுக்கு முன்பாகத் தொடர்ச்சியாக மறியல் போராட்டத்தினை நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

திருகோணமலையிலுள்ள மாகாணக்கல்வி அமைச்சின் அலுவலகம் முன்பாக நடாத்தும் மறியல் போராட்டத்தில்- ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒருதொகுதி தொண்டர் ஆசிரியர்கள் பங்குபற்றுவது என்றும் முடிவு செய்யப்பட்டது. (ச)

# ஆபத்தான தொற்றுக்காய்ச்சல் பரவுவதாக உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை!

உலகில் பல பகுதிகளிலும் ஒருவிதமான தொற்றுக்காய்ச்சல் பரவி வருவதாகவும், இதனால் எச்சரிக்கையுடன் இருக்கும்படியும் உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

உலகின் பல்வேறு நாடுகளிலும் ஒருவித தொற்றுக் காய்ச்சல் தீவிரமாகப் பரவி வருகின்றது. இது சீனா, வியட்நாம், கனடா உள்ளிட்ட நாடுகளில் மிகவும் தீவிரமாகப் பரவிவருவதாகவும் ஏனைய நாடுகளிலும் இந்தக் காய்ச்சலின் தாக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்காய்ச்சல் நோய்க்கு இலக்கான பலர் உயிரிழக்கத் தொடங்கியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. இதையடுத்தே உலக சுகாதார நிறுவனம் மேற்படி எச்சரிக்கையை விடுத்துள்ளது.

1918 ஆம் ஆண்டில் உலகில் பரவிய ஒருவித கொள்ளைக் காய்ச்சல்போன்ற தீவிரத்துடன் இது பரவிவருவதாகவே உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. இதனால், நாடுகளுக்கிடையில் பயணம் செய்வோரும், உல்லாசப் பிரயாணிகளும் மிகுந்த அவதானமாக இருக்க வேண்டும் என்றும் உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது.

1918 ஆம் ஆண்டில் உலகின் பல பாகங்களிலும் பரவிய ஒருவிதக் கொள்ளைக் காய்ச்சலால் சுமார் இரண்டு கோடி மக்கள் உயிரிழக்க நேரிட்டமை குறிப்பிடத்தக்கது.

# அழகெழல் போட்டிகள் நாளையும் மறுநாளும்!

அழகியல் கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடாத்தப்படுகின்ற சித்திரம், சங்கீதம், நடனம், நாடகம்போன்ற துறைகளுக்கான அழகெழல் போட்டிகள் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன.

நாளை காலை 9 மணி தொடக்கம் - சித்திரம், நாடகம் ஆகிய போட்டிகளும், நாளைமறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் - சங்கீதம், நடனம் ஆகிய போட்டிகளும் நடைபெறவுள்ளன.

இசை, நடனம், நாடகப் போட்டிகளில் பங்குகொள்ளும் மாணவர்களை மதிய உணவுடன் சமுகம்தரும்படி கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கமலநாதன் தெரிவித்துள்ளார்.

# யாழ். பல்கலைக்கழக ஊழியர்களின் வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்தது!

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் மேற்கொண்டு வந்த வேலைநிறுத்தப் போராட்டம் நேற்றுமுன்தினம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வழங்கிய உறுதிமொழியை அடுத்து இந்தப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் நிர்வாகத்திடம் விடுத்த கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் இழுத்தடிப்பு செய்துவருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அதனை நடைமுறைப்படுத்தக்கோரியும் கடந்த 3 ஆம் திகதிமுதல் வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இதனால், பல்கலைக்கழகத்தின் நீர், மின் விநியோகம், பரீட்சை மற்றும் பாதுகாப்பு சேவைகள் தவிர்ந்த ஏனைய துறைகளின் பணிகள் பாதிக்கப்பட்டன.

கடந்த இருவார காலமாக நடைபெற்று வந்த வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஊழியர்கள் விடுத்த கோரிக்கைகள் தொடர்பாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு எதிர்வரும் 24 ஆம் திகதிக்குள் உரிய நடவடிக்கை எடுப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் . கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வழங்கிய உறுதிமொழியை அடுத்து இந்த வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் வழங்கிய உறுதிமொழியை அடுத்து, இந்த வேலைநிறுத்தப் போராட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி கால எல்லைக்குள் சாதகமான பதில் தராவிட்டால்- எதிர்வரும் 24 ஆம் திகதி மீண்டும் போராட்டத்தில் குதிக்கவுள்ளதாகவும் ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ்.கலாராஜ் தெரிவித்துள்ளார்.

(ச)

## நாகபாம்பு தீண்டிய போராளியை காப்பாற்ற உதவிய பொலிஸார்!

(திருமலை)

நாகபாம்பு தீண்டிய, புலிகள் இயக்கப் போராளி ஒருவரைப் பொலிஸார் திருகோணமலை வைத்தியசாலைக்குச் கொண்டு செல்ல உதவினர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

திருகோணமலை கடவாயக் காட்டுப்பகுதியில் பாம்பு தீண்டிய போராளி ஒருவரை - பாலம் போட்டாறு சோதனைச் சாவடியைக் கடந்து வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்ல உதவுமாறு புலிகள் கேட்டுக்கொண்டனர்.

இதையடுத்து பொலிஸ் அத்தியட்சகர் பாம்பு தீண்டிய போராளியைப் பொலிஸ் அம்புலன்ஸ் வண்டியில் ஏற்றி திருமலை வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தார்.

நாகபாம்பு தீண்டிய மேற்படி போராளி தற்போது திருமலை வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார்.

(ச)

## மீண்டும் போர் வேண்டாம் ஜப்பானில் மகஜர் கையளிப்பு!

(கொழும்பு)

அரசாங்கமும் - தமிழீழ விடுதலைப்புலிகளும் மீண்டும் போர் ஏற்படுவதற்கு இடமளிக்கக்கூடாது எனக் கோரும் மகஜர் ஒன்றை ஜப்பானில் நடைபெறும் சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

மதங்களுக்கிடையிலான நல்லிணக்கப்பேரவை இந்த மகஜரை அரச மற்றும் புலிகள் தரப்பு பிரதிநிதிகளுக்கு இதை அனுப்பி வைத்துள்ளது. முப்பது மத நிறுவனங்கள் இந்தப் பேரவையில் இடம்பெற்றுள்ளன.

அரசும் - புலிகளும் எந்தவொரு சூழலிலும் மீண்டும் போர் ஏற்படுவதற்கு இடமளிக்கக்கூடாது என இந்த மகஜரில் வலியுறுத்தப்பட்டிருப்பதாகவும், நிரந்தர சமாதானத்திற்கான உறுதியான அடித்தளம் பேச்சுக்களில் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும் என்றும் மதங்களுக்கிடையிலான நல்லிணக்கப் பேரவையின் தலைவரான மாதம்பாகம அஸஜி தேரோ தெரிவித்தார்.

## தென்மராட்சி பிரதேச செயலக விளையாட்டு விழாவுக்கு ஏற்பாடு

(சரசாலை)

தென்மராட்சி பிரதேச இளைஞர், யுவதிகளுக்கான சைக்கிள் மற்றும் மரதன் ஓட்டப்போட்டிகள் இம்மாத இறுதிக்குள் பிரதேச செயலகத்தினால் நடாத்தப்படவுள்ளன.

இப்போட்டிகளில் கலந்துகொள்ள விரும்புவோர் விண்ணப்பங்களை சுயமாகத் தயாரித்து தத்தமது பகுதி கிராம அலுவலரினால் உறுதிப்படுத்தி எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இவ்வருடத்திற்கான பிரதேச விளையாட்டு விழா சம்பந்தமான கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்குப் பிரதேச செயகத்தில் நடைபெறுமெனவும், பிரதேசத்திலுள்ள பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகளை கலந்துகொள்ளுமாறும் தென்மராட்சிப் பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

(34)

# இலங்கையில் வேலையில்லாப் பிரச்சினைக்கு தாய்மொழிமூல கல்விமுறை காரணமல்ல!

**இரண்டு தசாப்தகாலமாக யாழ்.பல்கலைக்கழகத்தில் வணிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளராகவும், வணிகத்துறைத் தலைவராகவும் பணியாற்றிவரும் கந்தையா தேவராஜாவுடனான நேர்காணல் இது.**

*கேள்வி:-* வணிகக்கல்வி - தொழிற்கல்வியாக மாற்றப்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்கிறீர்களா?

*பதில்:-* இலங்கையில் வணிகக் கல்வியானது ஒரு கல்விசார் கற்கை நெறியாகவே நீண்டகாலம் கற்பிக்கப்பட்டு வருகின்றது. ஐம்பதுகளின் இறுதிப்பகுதியில் வித்தியோதயப் பல்கலைக்கழகம் வணிகப் பட்டப்படிப்பை ஆரம்பித்திருந்தது. அதன் பின்னர் அப்பல்கலைக்கழகத்தால் அறுபதுகளில் வணிககற்கைநெறிக்கான பட்டப்பின் படிப்புகளும் ஆரம்பிக்கப்பட்டன.

ஆரம்பத்தில் வித்தியோதயப் பிரிவேனாவாக இருந்த நிறுவனம், பின்னர் வித்தியோதயப் பல்கலைக் கழகமாகவும், பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் வித்தியோதய வளாகமாகவும் மாறி - இன்று சிறீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகமாக இயங்கிவருகின்றது.

இப்பல்கலைக்கழக்தில் மட்டுமல்லாது பின்னர் களணிப் பல்கலைக்கழகத்திலும், பேராதனைப் பல்கலைக்கழகத்திலும், தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், றுகுணு பல்கலைக்கழகம், சப்பிரகமுவ பல்கலைக்கழகம், ராஜரட்ட பல்கலைக்கழகம் ஆகியவற்றிலும் இன்று தொழில்சார் கற்கைநெறியாக வணிகக்கல்வி மாற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கை மாணவ மட்டத்திலும், பொதுமக்கள் மட்டத்திலும் அதிகரித்து வருகின்றது. பட்டதாரிகளுக்குக் கோட்பாடு அறிவு மட்டுமன்றி, செய்முறை அறிவினையும் அதிகரிக்க வேண்டுமென்ற விருப்பம் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மட்டத்தில் அதிகரித்து வருகின்றது.

குறிப்பாக - உலக மயமாக்கம், தனியார் மயமாக்கல், மக்கள் மயமாக்கல், சுயவேலை வாய்ப்பு, கணனி மயமாக்கம், வேலையில்லாப் பிரச்சினை போன்ற காரணங்களால் வணிகக்கல்வி - தொழிற்கல்வியாக மாற்றப்பட்டால் மட்டுமே நாட்டுக்குப் பயனுள்ளதாக அமையமுடியும் என உணரப்படுகின்றது.

வணிகக்கல்வி - தொழிற்கல்வியாக மாற்றப்பட வேண்டும் என்பதைப் பல்கலைக்கழக மறுசீரமைப்பு வலியுறுத்துகின்றது. ஒவ்வொரு பல்கலைக்கழகமும் தமக்கெனக் கலைத்திட்டங்களைத் தயாரிக்கும் வேளையில், தொழில்சார் அறிவுக்கு மதிப்பளிக்க வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மறுசீரமைப்புக்கான பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவில் ஒழுங்கு செய்யப்பட்ட பயிற்சிப் பட்டறையிலே, மானிய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மெண்டிஸ் -




தொழில்சார் பயிற்சியுடன் கூடியதாகவே வணிகக்கற்கைநெறிகள் அமையவேண்டும் என்பதனை வலியுறுத்தியதுடன், இத்தகைய கருத்தையும் முன்வைத்துள்ளார்.

இதற்கெனப் பட்டதாரி மாணவர்களைத் தொழில் நிறுவனங்களுக்கு அனுப்பி, பயிற்சியளிக்க வசதியாக அகில இலங்கை வணிகச் சம்மேளனத்துடன் ஒழுங்குகளையும் செய்துள்ளார். இதன் காரணமாகப் போட்டிமிக்க தொழிற்சந்தையிலே மிகச்சுலபமாக வேலையைப் பெற்றுக் கொடுக்கவும், உயர் உற்பத்தித் திறன் கொண்டவர்களாக மாறவும் வணிகப் பட்டதாரிகளால் முடியும். இதன் காரணமாகச் சர்வதேசதரத்துக்கு ஏற்றவாறு எமது நாட்டு வணிகப்பட்டதாரிகளைத் தயார் செய்வதுடன் - உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பைப் பெறும சந்தர்ப்பமும் அதிகரிக்கும்.

இதன் காரணமாகவே கலைத் திட்டத்துக்குள்ளேயே தொழில்சார் பயிற்சியை (Industrial Training) அடக்கியதாகப் பட்டப்படிப்புக்களை ஏற்படுத்துதல் வேண்டும். இது தரம் மிக்க வணிகப்பட்டதாரிகளை உருவாக்கவும், தொழில் விருத்தியை ஏற்படுத்தவும் வகைசெய்யும் என நம்புகின்றேன்.

*கேள்வி:-* தாய்மொழி மூலமான வணிகக்கல்வி வேலையில்லாப் பிரச்சினையைத் தோற்றுவிக்கும் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா?

*பதில்:-* இதனை என்னால் ஏற்க முடியாது. உலகின் பல நாடுகள் தாய்மொழி மூலமான வணிகக் கல்வியைத் தொடர்ந்து பின்பற்றி வருகின்றன. உலகின் வளர்ச்சியடைந்த நாடுகளில் ஒன்றான ஜப்பான் - தாய்மொழியிலேயே தொழில் சம்பந்தமான முழு அறிவையும் வழங்கி, வினைத்திறன் மிக்க ஊழியர்களைக்கொண்ட நாடாக விளங்குகின்றது.

அங்கு வேலையில்லாப் பிரச்சினை என்பது காணப்படவில்லை. ஆனால, தாய்மொழியில் அல்லாது ஆங்கிலமொழி மூலமான வணிகக் கல்வியைகொண்ட நாடாக இந்தியா காணப்படுகின்றது. அதேநேரம், வேலையில்லாப் பிரச்சினையும் அந்நாட்டிலேயே மிக உயர்வாகக் காணப்படுவதனை அவதானிக்க முடியும். எனவேதான் தாய்மொழி மூலமான வணிகக்கல்வி வேலையில்லாப் பிரச்சினையைத் தோற்றுவிக்கும் எனக்கூறமுடியாது.


இலங்கையைப் பொறுத்தவரை தாய்மொழி மூலமான உயர்கல்வி என்பது இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டமையால் - சிங்களமொழி அல்லது தமிழ்மொழி மூலமாகவே உயர்கல்வி பெறும் வாய்ப்பு எமது மாணவர்களுக்கு ஏற்பட்டது. அதே நேரம் அவர்களது ஆங்கில அறிவை அதிகரிக்க விசேடவகுப்புக்கள் நடாத்தப்பட்டு வந்தன.

அவ்வகுப்புக்கள் மூலம் தமது ஆங்கில அறிவை வளர்த்துக் கொண்டவர்கள், வணிகப்பட்டப் படிப்பை முடித்துக் கொண்டபின் நல்ல தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள முடியும். இதன் காரணமாக இலங்கையில் தாய்மொழி மூலமான வணிகக்கல்வியே வேலையில்லாப் பிரச்சினைக்குக் காரணம் எனக் கூறமுடியாது. தாய்மொழிக் கல்வியில் பட்டம்பெற்ற பலர் தேசிய ரீதியாகவும், சர்வதேசரீதியாகவும் புகழ்பெற்றிருப்பதனைக் காணும் பொழுது - சுயமொழி மூலமான வணிகக்கல்வி, வேலையில்லாப் பிரச்சினையைத் தோற்றுவிக்கவில்லை என்பதனை உறுதிப்படுத்தலாம்.

*கேள்வி:-* தொழில்வாய்ப்பில் வணிகப் பட்டதாரிகளுக்கு உரிய இடம் வழங்கப்படுவதில்லை என்பதை நியாயப்படுத்த முடியுமா?

*பதில்:-* இலங்கையைப் பொறுத்தவரையில் இது ஒரு வளர்ச்சியடையாத நாடு என்ற காரணத்தால் வணிகக்கல்வி மூலமான பட்டங்களைப் பெற்றவர்களுக்கு உரிய தொழிலை வழங்கமுடியாத நிலையில் அரசாங்கம் உள்ளது. வணிகமாணி, தொழில்நிர்வாகமாணி, விஞ்ஞானமாணி ஆகிய பட்டங்கள் வணிகக்கல்வியைப் பெறுவோரால் பெற்றுக்கொள்ள முடிகின்றது. இவற்றுக்குரிய இடம் கிடைக்க வேண்டுமாயின் எமது வியாபாரத்துறையும், சேவைத்துறையும் வளர்ச்சியடைந்திருக்க வேண்டும். அவ்வாறில்லையெனில், வணிகப்பட்டங்களைப் பெற்றோர் உரிய தொழில் வாய்ப்புக்களைப் பெறமுடியாது.

இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரை வணிகமாணிப் பட்டங்களைப் பெற்றவர்கள் மட்டும் ஆசிரியத் தொழிலுக்குச் சேர்த்துக் கொள்ளப்படலாம் என்ற எடுகோளை வைத்துள்ளது. அத்தகையவர்களுக்கு நிர்வாகசேவையில் இடமளிக்கலாம் என்பதை அரசாங்கம் கருத்தில்கொள்வதில்லை. தொழில் நிர்வாகமாணிப்பட்டத்தைப் பெற்றவர்கள் - நிர்வாகப்பணிகளுக்குப் பொருத்தமானவர்கள் என்பது கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.


க.தேவராஜா

வணிகக்கல்வி பெற்றுக்கொண்டவர்களுக்கு அரசாங்கம் வேலை வாய்ப்புக்களை வழங்குவதைவிட, தனியார்துறையே பெருமளவான வேலைவாய்ப்புக்களை வழங்க முடியும். அத்துடன், சுயவேலை வாய்ப்புக்களைத் தோற்றுவிக்கும் ஆற்றலும் வணிகக்கல்வி பெற்றவர்களிடையே வளர்க்கப்படுமாயின், எந்தவொரு வணிகப்பட்டதாரியும் வேலையில்லாதவர் என இருக்கத் தேவையில்லை.

இங்கிலாந்தில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்விலே - கற்கை நெறிகளில் முதலிடம் பெறும் வாய்ப்பை வணிகப்பட்டமே கொண்டுள்ளது என்பதை கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன். இன்றைய உலகில் பெரும் எண்ணிக் கைகொண்ட மாணவர்களால் விரும்பிக்கற்கப்படும் பாடநெறியாக வணிகக்கல்வி உள்ளது என ஆய்வில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

**நேர்காணல்**
**சாந்தகுமார்**

---

# ஆயுதப் போராட்டத் தோல்வியால் அரசியற்களம் வந்துள்ள ஜே.வி.பி.

(நேற்றைய தொடர்ச்சி...)

இதனால் வேலையற்ற இளைஞர், யுவதிகள் அதிக மூர்க்கம் கொண்டிருந்தனர். இப்போராட்டம் சரியானதா? அல்லது அதற்கான தீர்வு என்ன என்பதனைச் சிந்திக்


ரோஹண விஜேவீர

காமல், அவ்விளைஞர்களின் போராட்டத்தை நசுக்குவதில் இராணுவயுத்தியைக் கையாண்டவர் - உலகின் முதல் பெண்பிரதமரான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவே.

இலங்கையின் நவன வரலாற்றில் ஓர் இரத்தம் தோய்ந்த அடக்குமுறையைத் தோற்றுவித்தவரும் அவரே. விளைவு 14 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர், யுவதிகள் கொல்லப்பட்டனர். அத்துடன், ஜே.வி.பியின் முதலாவது எழுச்சி, முற்றுப்பெற்றது.

இரண்டாவது எழுச்சி - 1989 காலப்பகுதியில் ஏற்படுத்தப்பட்டது. 1971 இல் கிளர்ச்சி ஒடுக்கப்பட்ட போது, ஜே.வி.பியின் தலைவரான ரோஹண விஜேவீர சிறைப் பிடிக்கப்பட்டு - யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை போன்ற சிறைகளில் அடைக்கப்பட்டார்.

ஸ்ரீமாவோவின் இந்த நடவடிக்கைக்கு எதிராக ஜே.வி.பி. ஆதரவாளர்களை அணைக்கும் வகையில் 1977 இல் ஜே.ஆர். ஜயவர்த்தன பதவிக்கு வந்ததும், ரோஹண விஜேவீரவைப் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலைசெய்தார். எனினும், 12 வருடங்களின் பின் மீண்டும் ஒரு கிளர்ச்சியில் சிங்கள இளைஞர், யுவதிகளை ஈடுபடுத்தினார் விஜேவீரா.

இக்காலகட்டத்தில் வட - கிழக்கில் இந்திய இராணுவம் நிலைகொண்டிருந்தமையால், வட - கிழக்கிலிருந்த இலங்கை இராணுவம், பொலிஸாரை முழுவதுமாகப் பயன்படுத்தி - ஜே.வி.பி கிளர்ச்சியினை ஒடுக்குவதில் அப்போதைய பிரதமரான ஆர்.பிரேமதாசவும், பாதுகாப்பு அமைச்சராகவிருந்த ரஞ்சன் விஜேரட்ணவும் தீவிரமாக ஈடுபட்டனர். விளைவு - கிளர்ச்சி ஒடுக்கப்பட்டதுடன், ரோஹண விஜேவீரவும் கொல்லப்பட்டார். 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர், யுவதிகளும், சிங்கள மக்களும் கொல்லப்பட்டனர். இது ஜே.வி.பியின் இரண்டாவது வீழ்ச்சியாகும்.

இரண்டாவது வீழ்ச்சியின் பின்னர் மீண்டும் ஓர் ஆயுதப்போராட்டத்தினை ஆரம்பிக்கும் வல்லமையோ, பக்கச்சூழலோ, தலைமைத்துவமோ ஜே.வி.பிக்கு இருக்கவில்லை. ரோஹண விஜேவீரவிற்கு அடுத்தடுத்தநிலையில் இருந்த தலைவர்களும் கொல்லப்பட்டதால், ஜே.வி.பி அமைப்பிற்குத் தலைமை தாங்கக் கூடிய ஓர்மமுள்ள தலைவர்கள்கூட இருக்கவில்லை.

இந்நிலையில்தான் தற்போது முதலாளித்துவ நாடொன்றில் (பிரித்தானியா) வசித்து வருகின்ற சோமவன்ச அமரசிங்க தலைவரானார். மத்தியகுழு உறுப்பினர்கள் பட்டியலில்கூட - இடம்பெறாத ரில்வின் சில்வா, விமல் வீரவன்ச போன்றோர் தலைமைப்பதவிகளை இலங்கையில் பெற்றனர்.

ஆயுதப்போராட்டம் என்ற விடயத்தினை, நினைத்துக்கூடப் பார்க்கமுடியாதநிலையில் இருந்த ஜே.வி.பியினர் - 1994 இல் ஜனநாயக நீரோட்டத்தில் கலந்துகொள்வதாகத் தேர்தலில் குதித்தனர். இந்த ஆரம்பம் இன்றுவரை இலங்கை இலங்கை அரசியலில் ஓரளவு நின்றுபிடிக்க வைத்திருக்கிறது. அதே வேளை, தென்பகுதியில் தாம் "மூன்றாவது சக்தி" என்றும் சொல்


சோமவன்ச அமரசிங்க

லிக்கொள்கிறார்கள்.

இரு பெரும்பான்மைச் சிங்களக் கட்சிகள் பெற்ற ஆசனங்களை விடுத்து, மூன்றாவதாகவுள்ள ஒரு கட்சி - ஒரு ஆசனத்தைப் பெற்றால்கூட, அது மூன்றாம் தரத்தில் தான் இருக்கமுடியும். (உதிரிக் கட்சிகளுக்குள் அதிக ஆசனம் ஜே.வி.பிக்கு உண்டு.)

இவ்வாறு ஜே.வி.பி தேர்தல் மூலம் அரசியலுக்கு வந்த பின்னர் கூட, ஓர் ஆதிக்கம் செலுத்தும் கட்சியாக இருக்கமுடியவில்லை.

2000 ஆம் ஆண்டில் அஷ்ரப்பின் மரணத்தின் பின்னர், முஸ்லிம் காங்கிரசின் தலைமைத்துவதற்கு வந்த ரவூப் ஹக்கீம் தனது கட்சியைப் பொதுஜன ஐக்கிய முன்னணிக் கூட்டிலிருந்து கழற்றிய பின், சந்திரிகா அரசு கவிழும்நிலை ஏற்பட்டபோது (2001) அதற்கு முட்டுக் கொடுக்கும் வாய்ப்பு ஒன்று ஜே.வி.பிக்குக் கிடைத்தது. உண்மையில் 1971 இல் தமது தோழர்களைக் கொன்றுகுவித்த அம்மையாரின் மகளுடன் உறவு கொள்ளும் வாய்ப்பு கோட்பாட்டுரீதியில் ஜே.வி.பிக்கு இல்லை. தமது அரசியல் ஆதாயத்திற்காகச் சந்திரிகா அரசுடன் கைகுலுக்கியது ஜே.வி.பி.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற தேர்தற்காலத்தில் - ஏற்கனவே இலங்கை அரசாங்கத்தால் தேடப்பட்டு வருபவரும், வெளிநாட்டில் வாழும் தலைவருமான சோமவன்ச அமரசிங்க இலங்கைக்குள் வந்து தேர்தற் பிரசாரத்தில் ஈடுபடுவதற்கான அனுமதியைச் சந்திரிகா செய்திருந்தார். தனது அரசியலுக்கு ஜே.வி.பியின் ஆசனங்கள் உதவும் என்ற எதிர்பார்ப்பிலேயே இவ்வொழுங்குகள் செய்து கொடுக்கப்பட்டன.

இந்தக் கட்டத்தில் தற்போதுள்ள ஜே.வி.பி.யினரின் நிலையினை சற்று அவதானிக்கலாம்.

★ஜே.வி.பி ஆயுதப்போராட்டம் ஒன்றின் மூலம் தமது இலக்கினை அடையமுடியாது போய்விட்ட நிலையில், விடுதலைப் புலிகள் ஆயுதப் போராட்டத்தின் மூலம் பல விடயங்களைச் சாதித்துவிட்டது மட்டுமல்ல, தேர்தலில் நிற்காமலே இலங்கை அரசியலைத் தீர்மானிக்கும் சக்தியாக மாறிவிட்டனர் என்ற தாழ்வுச்சிக்கல்.


(நாளை தொடரும்...)




# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




# அரங்கம் சரியில்லை



நம்ம ஆள் சொல்றது சரியாப்படலையே!

2003 உலகக் கிண்ணப் போட்டிகளுக்கான தெரிவு மற்றும் புள்ளி முறைகள் பற்றி, நியூசிலாந்து அணியின் பயிற்றுநர் டெனிஸ் அபர்காட் அதிருப்தி தெரிவித்துள்ளார். பின்பற்றப்பட்ட நடைமுறை, சிறந்த அணிகள் இறுதிவரை வரும் வாய்ப்பைப் பறித்துவிட்டன என்று குறைப்படுகின்றார். கென்யாவும், சிம்பாப்வேயும் - ஆடாமல் பெற்றுக்கொண்ட நான்கு புள்ளிகளும், மேலதிக விளையாட்டு நாட்கள் இல்லாமற் போனதாலும் மேலே வந்தன என்கிறார் அவர்.

அத்தோடு, முதற்சுற்றில் பெறப்பட்ட புள்ளிகள், இரண்டாம் சுற்றுக்குக் கொண்டுசெல்லப்பட்ட முறையையும் அவர் விமர்சிப்பதுடன், ஒவ்வொரு சுற்றும் புத்தம் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும் என்கிறார். பாகிஸ்தானும், மேற்கிந்திய அணியும் மழையின் காரணமாகப் பாதிக்கப்பட்ட அணிகள். இங்கிலாந்து, ஆட்டத்தில் பங்குகொள்ளாமையால் புள்ளிகளை இழக்க நேர்ந்தது. நியூசிலாந்து, பாதுகாப்பு அச்சுறுத்தலைக் காரணம்காட்டி கென்யாவுக்குச் செல்லமறுத்தது.

இதனால் குறைவடைந்த மொத்தப் புள்ளிகள் நியூசிலாந்தின் அரை இறுதி ஆட்டத்துக்கான வாய்ப்பைப் பறித்தது. இதற்குக் காரணமாக அமைந்தது, முதல் சுற்றுப் போட்டிகளின் புள்ளிகளும் இரண்டாம் சுற்றில் சேர்க்கப்பட்டதே என்பது அவர் கருத்து. கென்யாவுடன் தாங்கள் விளையாடியிருந்தால் அரை இறுதிப் போட்டிக்குத் தகுதிபெறுவது கடினமானதொன்றாக இருந்திராது என்கிறார் அபர்காட்.


அதேவேளை - அவுஸ்திரேலியா, இந்தியாவிற்கு எதிரான இரண்டு ஆட்டங்களிலும் நியூசிலாந்துத் துடுப்பாட்டவீரர்கள் செம்மையாகச் செய்யவில்லை என்றும் அவர் குறைபட்

-நர்மதா-

டுக் கொள்கின்றார்.

என்றாலும், அரை இறுதிக்கு வரும் சந்தர்ப்பத்தை லட்டுப் போல் இழந்துவிட்டு, அரசியலையும் விளையாட்டையும் கலந்து தாமே குழம்பிப் போய் நிற்பவர்கள், ஏதோ குறைகள் கதைப்பது சாத்தான் வேதம் ஓதுவதுபோல இருக்கின்றது.

## பரி.யோவான் வெற்றி




பரி.யோவான் அணித் தலைவர் அகிலன் துடுப்பெடுத்தாடும் காட்சி (படம்: எவ்.எக்ஸ். சுதர்சன்)

வடக்கின் மாபெரும் போரின் தொடர்ச்சியான ஒருநாள் போட்டியில், மத்தியகல்லூரி அணியினை பரி.யோவான் அணி 52 ஓட்டங்களால் வென்றது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்றுத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பரியோவான் அணி, 46.4 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பரி.யோவான் அணித்தலைவர் அகிலன் ஆட்டமிழக்காமல் 37 ஓட்டங்களையும், றஜீவன் 23 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

மத்தியகல்லூரி சார்பில் அணித்தலைவர் ரஜீவ்குமார் 8 ஓவர் பந்துவீசி 17 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும், கார்த்தீபன் 10 ஓவர் பந்து வீசி 32 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். தொடர்ந்து, 163 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மத்திய கல்லூரி அணி, 34.4 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 110 ஓட்டங்களைப்பெற்றது. இதில் சிவகுமார் ஆட்டமிழக்காமல் 26 ஓட்டங்களைப் பெற்றார்.

# தரத்தில் குறைவதில்லை தங்கம்




ஷோண் பொல்லக் – எனது தெரிவு கிரீம் ஸ்மித்

ஷோண் பொல்லக்கின் பின் - தென்னாபிரிக்க அணியின் தலைவர் யார் என்பது, சுடுகுது மடியைப்பிடி என்ற முறையில் எடுக்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. தென்னாபிரிக்க அணியைப் பொறுத்தவரை அதன் தலைமைக்குப் பல பெயர்கள் தயார் நிலையிலேயே இருந்திருக்கின்றன. ஜக்கஸ் கலிஸ், ஹேர்செல் கிப்ஸ், நீல் மக்கென்சி, மக்காயா என்ரினி, மார்க் பௌச்சர் என்று வரிசை நீள்கிறது. ஆனால் உலகக்கிண்ணப் போட்டிகளில் இன்னும் மேலே, மேலே ஏறிவந்திருந்தால், சிலவேளை பொல்லக் தொடர்ந்தும் அணித்தலைவராகவே இருந்திருக்கக்கூடும்.

ஆனால், இன்று கிரீம் ஸ்மித் தனது 22 வயதில் தென்னாபிரிக்க அணித்தலைமையை ஏற்க அழைக்கப்பட்டிருக்கிறார். இவர் ஒரிஜினல், 15 பேரில் அன்றி ஜொன்ரி றோட்சின் இடத்துக்குக் கொண்டுவரப்பட்டவர். ஸ்மித்தின் போரிடும் குணம், அவரது தெரிவுக்கு PLUS POINT ஆக இருந்



ஸ்மித் – இளையதலைமுறைத் தலைவன்

திருக்கும் போலத் தெரிகிறது. ஏனெனில், மக்ராவின் பந்து வீச்சைச் சிறப்பாக எதிர்கொண்டு ஒரு ஓர்மத்தின் பின்னணியில் சாத்தியது எடுத்துக் காட்டப்படுகின்றது. அதுமட்டுமன்றி நிறைந்த துடுப்பாட்ட வளம் கொண்டவராக அவர் இனங்காணப்படுகிறார்.

இதேவேளை - கலிஸ், பௌச்சர் ஆகிய இருவரும் உலகக் கிண்ணப் போட்டிகளில் எதிர்பார்த்த அளவு செய்யாமை, அவர்களைப் பின்தள்ளிவிட்டது என்று கூறப்படுகின்றது. ஆனால், ஸ்மித் தனக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களை நன்கு பயன்படுத்தியுள்ளார்.

ஹேர்செல் கிப்ஸின் குணநலச் செயற்பாடுகள், தெரிவாளர்களை திருப்தியுறச்செய்யத் தவறிவிட்டது. இவர் முன்பே சில சர்ச்சைகளுக்கு உள்ளானவர். மக்காயா என்ரினிக்கு அனுபவம் இன்னும் தேவை என்ற வகையில் சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை. இப்படியாக நியாயபூர்வமான காரணங்கள் எடுத்துக்காட்டப்




கலீஸ் – உங்கள் தெரிவு நானாக இருந்தால்...

பட்டபின், ஸ்மித் அணித்தலைமைக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஸ்மித் முன்னதாக, இங்கிலாந்தின் ஹம்ப்ஷயர் கவுன்ரிக்கு விளையாடியவர். ஹம்ப்ஷயர் அணித் தலைவர் றொபின் ஸ்மித், கிரீம் ஸ்மித்

-நிர்மலன்-

பற்றிய பல விடயங்களை எடுத்துக் கூறியுள்ளார். அதுவே கிரீம் ஸ்மித்துக்குப் போதுமான சான்றிதழ்களாகும்.

ஹேர்செல் கிப்ஸ் அணித்தலைவராகியிருந்தால், தென்னாபிரிக்காவின் தலைமையை ஏற்றிருந்தால்- முதன்முதலாக இப்பதவியைப் பெற்ற வெள்ளையர் அல்லாதவர் என்ற பெருமையை (ஆப்ரிகானாஸ்) பெற்றிருப்பார். மக்காயா என்ரினி, முதல் கறுப்பு இன அணித் தலைவர் என்ற பெயரைப் பெற்றிருப்பார்.

எது எவ்வாறாயினும் - டொனால்ட், கிப்ஸ் போன்றவர்கள், உலகக் கிண்ணப் போட்டிகளின் ஆரம்பத்திலேயே பொல்லக்கிற்குக் கொடுத்த உளவியல் தாக்கங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கவையல்ல. இன்று அவரது தலைமைப் பதவி நீக்கப்பட்டாலும், அவர் எவ்வகையிலும் தரம் குறைவடைந்த கிரிக்கெட் வீரரும் அல்ல.

மொத்தத்தில் டொனால்ட், குளூஸ்னர், சிலவேளை கலிஸ் போன்றவர்கள் ஓய்வுபெற்றாலும், ஒரு இளம் தலைவனின் தலைமையின் கீழ் அரசியல், தனிப்பட்ட சர்ச்சைகள் எதுவும் இன்றி, வேகமாக வளர்ந்துள்ள சர்வதேச தரத்தை இன்னும் உயர்த்தும் வாய்ப்பு தென்னாபிரிக்காவுக்கு நிறையவே உண்டு.

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

### அவுஸ்திரேலிய எதிர் இலங்கை அணி

| அவுஸ்திரேலிய அணி | | | இலங்கை அணி | | |
|---|---|---|---|---|---|
| கில்கிறிஸ்ட் | C சங்கக்கார b டீ சில்வா | 22 | அத்தபத்து | b பிரட் லீ | 14 |
| ஹேடன் | C திலகரட்ண b வாஸ் | 20 | ஜயசூரிய | C சிமெண்ட்ஸ் b மக்ரா | 17 |
| பொண்டிங் | C ஜயசூரிய b வாஸ் | 02 | திலகரட்ண | C கில்கிறிஸ்ட் b பிரட் லீ | 03 |
| லீமன் | b ஜயசூரிய | 36 | அவிஷ்க | C பொன்டிங் b பிரட் லீ | 01 |
| சிமெண்ட்ஸ் | not out | 91 | டீ சில்வா | run out | 11 |
| பெவன் | C சங்கக்கார b ஜயசூரிய | 00 | சங்கக்கார | Not out | 39 |
| ஹொக் | St. சங்கக்கார b டீ சில்வா | 08 | மஹேல | C கில்கிறிஸ்ட் b ஹொக் | 05 |
| ஹார்வி | C சங்கக்கார b வாஸ் | 07 | ஆர்னல்ட் | C பிரட் லீ b ஹொக் | 03 |
| பைக்கல் | not out | 19 | வாஸ் | Not out | 21 |
| உதிரிகள் | | 07 | உதிரிகள் | | 09 |
| மொத்தம் 7 விக்கெட் இழப்புக்கு (50 ஓவர்கள்) | | 212 | 7 விக்கெட்டுக்களை இழந்து (38.1ஓவர்கள்) | | 123 |

| பந்து வீச்சு - இலங்கை அணி | O | M | R | W |
|---|---|---|---|---|
| வாஸ் | 10 | 1 | 34 | 3 |
| புலஸ்தி | 08 | 0 | 60 | 0 |
| டீ சில்வா | 10 | 0 | 36 | 2 |
| முரளி | 10 | 0 | 29 | 0 |
| ஜயசூரிய | 10 | 0 | 42 | 2 |
| ஆர்னல்ட் | 02 | 0 | 08 | 0 |

| பந்து வீச்சு - அவுஸ்திரேலிய அணி | O | M | R | W |
|---|---|---|---|---|
| மக்ரா | 07 | 1 | 20 | 1 |
| பிரட் லீ | 08 | 0 | 35 | 3 |
| பைக்கல் | 10 | 4 | 18 | 0 |
| ஹொக் | 10 | 1 | 30 | 2 |
| ஹார்வி | 2.1 | 0 | 11 | 0 |
| லீமன் | 01 | 0 | 04 | 0 |

அவுஸ்திரேலிய - இலங்கை அணிகளுக்கிடையில் நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் மழை குறுக்கிட்டு ஆட்டம் தடைப்பட்டதால், டக்வேர்த் லூவிஸ் முறையின்படி அவுஸ்திரேலிய அணி 48 ஓட்டங்களால் வெற்றிபெற்றதாகவும், இறுதி ஆட்டத்துக்கு தகுதிபெற்றதாகவும் அறிவிக்கப்பட்டது.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் அனுசரணை

ICC Cricket World Cup SOUTH AFRICA 2003

LG

அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச பங்காளி

அபான்ஸ் கம்பனியின்
அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள்
யாழ்பாண மின்னகம் - யாழ் நகர்
உஷா ஏஜென்சி - யாழ் நகர்
சுந்தர் சன் - மானிப்பாய்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சீருடை பெறுவதற்குச் சென்ற சிறுமி மீது பாலியல் வல்லுறவு

## சாவகச்சேரியில் கொடூரச் சம்பவம்

(தென்மராட்சி)

வீதியால் சென்று கொண்டிருந்த 16 வயதுச் சிறுமி ஒருத்தி, இனந்தெரியாதோரினால் கடத்தப்பட்டுப் பாலியல் வல்லுறுக்குட்படுத்தப்பட்ட சம்பவம் ஒன்று, சாவகச்சேரிப் பகுதியில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் சாவகச்சேரி, பெரியமாவடியில் வைத்து இக்கடத்தல் சம்பவம் நடைபெற்றுள்ளது.

நேற்று முன்தினம் மாலை 2 மணியளவில், பாடசாலை சீருடைத் துணியைப் பெற்றுக் கொள்வதற்காக தனது அண்ணணின் மகளுடன் துவிச்சக்கர வண்டியில் சென்றபோது இவர் கடத்தப்பட்டார்.

இருநபர்களால் கடத்திச் செல்லப்பட்ட சிறுமி, மீசாலை சோலையம்மன் கோயிலடியில் வைத்து பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப் பட்டுள்ளார்.

மயக்கமடைந்த நிலையில் இரவு 11.15 மணியளவில் இச் சிறுமியை அவரின் அண்ணனின் வீட்டு வாசலில் போட்டுவிட்டுச் சென்றுள்ளனர்.

சிறுமியைக் காணாது தேடியலைந்த உறவினர்கள், சிறுமியை மீட்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதித்தனர். உடனடியாகவே சிறுமி மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சைக்குட்படுத்தப்பட்டு வருகின்றார்.

இவர் உளவியல் ரீதியில் பாதிப்படைந்துள்ளதோடு, தன்னை இச் சம்பவத்துக்குட்படுத்தியவர்களை இனங்காட்ட முடியும் என்று சிறுமி கூறியதாக சிறுமியின் தாயார் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(சு,ரா,ச,34,111)

# முஸ்லிம்கள் குறித்து பேச புலிகள் இணக்கமாம்!

(கொழும்பு)

நேற்று ஜப்பானில் நடைபெற்ற சமாதானப் பேச்சுக்களின்போது, முஸ்லிம் மக்களது விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்கு, இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் இணக்கம் கண்டுள்ளதாக, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் மக்களது விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு முன்னர் திகதி குறித்திருந்தபோது, விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பல் தாக்கியழிக்கப்பட்டதனைத் தொடர்ந்து, அக்கலந்துரையாடல் இரத்துச் செய்யப்பட்டிருந்தது.

தற்பொழுது எதிர்வரும் 27 ஆம் திகதி, இருதரப்பினரும் முஸ்லிம் மக்களது விடயங்கள் பற்றிக் கலந்துரையாடத் தீர்மானித்துள்ளனர்.

# பேராசிரியர் மோகனதாஸ் துணைவேந்தராக பதவியேற்கிறார்

யாழ். பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக, பேராசிரியர் எஸ். மோகனதாஸ் (வயது 62) இன்று பதவியேற்கிறார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் இரசாயனவியலில் சிறப்புப் பட்டம்பெற்ற இவர், அடிலெயிட் பல்கலைக்கழகத்தில் விவசாய இரசாயனவியலில் கலாநிதிப் பட்டமும் பெற்றவராவார்.

பேராசிரியர் மோகனதாஸ், இதுவரை யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தின் தலைவராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 14 வயது சிறுவன் அடி காயங்களுடன் மீட்பு

(இணுவில்)

இணுவில் பகுதியில், இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்ட 14 வயதுடைய சிறுவன், அடிகாயங்களுடனும் நகக்கீறல்களுடனும் கொக்குவில் மஞ்சவனப் பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டார்.

இச்சிறுவன் சம்பவதினம் மாலை 5 மணியளவில் பத்திரிகை எடுக்கச் சென்ற சமயம், இனந்தெரியாதவர்களால் மோட்டார் சைக்கிளில் கடத்திச் செல்லப்பட்டுப் பின்னர், இரவு 8.30 மணியளவில் மீட்கப்பட்டார். தற்போது இச்சிறுவன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளான். (82)

## 6 ஆம் கட்டப் ...

ஆகியோர் கலந்துகொண்டதுடன், வள அணியினராக தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், பொருளாதார ஆலோசகர் கலாநிதி ஜோய் மகேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அரசு தரப்பில், பேராசிரியர் பீரிஸ், மிலிந்த மொறகொட, ரவூப் ஹக்கீம், பேனாட் குணதிலக மற்றும் வள அணியினரும் பங்குபற்றினர்.

இந்தப் பேச்சுக்களில், நோர்வே தரப்பில் வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன், நோர்வேயின் சிறப்புத் தூதுவர் சொல்ஹெய்ம், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் ஆகியோரும் கலந்து கொண்டனர். பேச்சுக்களின் ஆரம்ப நிகழ்வில் யசுசி அகாஷியும் கலந்து கொண்டார்.

## பேச்சு..

இடம்பெற்ற சம்பவம், பேச்சுவார்த்தையைப் பாதித்து விடக்கூடாது என்பதை உறுதி செய்ய வேண்டும் என்று, கலாநிதி அன்ரன் பாலசிங்கத்திடம் எடுத்துக் கூறியதாக யசுசி அகாஷி மேலும் தெரிவித்துள்ளார்.

# போட்டிப்பரீட்சையின் மூலம் தொண்டராசிரியர் நியமனம்

## கல்வி அமைச்சர் சுரனிமல ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு- கிழக்குப் பகுதிகளில் கடமையாற்றும் தொண்டராசிரியர்கள், போட்டிப் பரீட்சை மூலம் நிரந்தர நியமனம் பெறவுள்ளதாக பாடசாலைக் கல்வி அமைச்சர் சுரனிமல ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தற்பொழுது, வட-கிழக்குப் பாடசாலைகளில் கடமையாற்றும் தொண்டராசிரியர்கள் அனைவரும், தமது ஆவணங்கள் அனைத்தையும் பூர்த்தி செய்து மாகாணக் கல்வி அமைச்சிற்கு அனுப்பி வைக்க வேண்டும். பின்னர், அவ்விபரங்களின் அடிப்படையில் தொண்டராசிரியர்களுக்கான போட்டிப் பரீட்சை நடைபெறவுள்ளது என்றும் அமைச்சர் சுரனிமல மேலும் தெரிவித்துள்ளார். (01)

# கப்பல் மீதான தாக்குதல் குறித்து...

அடுத்ததாக - கண்காணிப்புக்குழு இறுதியாக வெளியிட்ட தீர்ப்பையும் நாம், அவர்களுக்கு எடுத்துக் காட்டினோம்.

அதாவது - இது புலிகளின் வர்த்தகக்கப்பல் என்பதைக் கண்காணிப்புக்குழு ஏற்றுக்கொள்கிறது. அத்துடன் - சிறிலங்கா கடற்படைதங்களை இந்தச் சம்பவத்திற்கு அழைக்காமல் - தான்தோன்றித்தனமாக முடிவெடுத்ததையும் சூசகமாகக் குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள் என்பதையும் சொன்னோம்.

அத்துடன், குறிப்பிட்ட கப்பல், ஆயுதங்களைக் கடத்திச் சென்றது என்பதற்கும் ஆதாரங்கள் இல்லையெனவும் கண்காணிப்புக்குழு சொல்லியிருக்கிறது.

ஆகவே, இது கண்காணிப்புக்குழுவை மீறி, தனித்துவமாக - சுயேட்சையாக, ஒருதலைப்பட்சமாக நீங்கள் எடுத்த நடவடிக்கையே. இது தவறானது எனவும் நாங்கள் அரச தரப்பிடம் குறிப்பிட்டோம்.

எம்மைப் பொறுத்தவரை இது பாரதூரமான சம்பவமாக இருந்தபோதும் - இந்தச் சம்பவத்தின் அடிப்படையில் நாம் எதிர்த்தாக்குதல் ஒன்றும் நடத்தாமல் - பொறுமையாக, நிதானமாக, அமைதியைப் பேணி- இந்தப் பேச்சுவார்த்தை தொடர வேண்டுமென முடிவெடுத்தமையானது - புலிகள், எந்தளவுக்கு சமாதான வழியில் தீர்வு காண்பதற்கு உறுதியாக, திடமாக இருக்கிறார்கள் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் எடுத்துச் சொன்னோம்.

இதற்கு பீரிஸ் - கடற்படையின் நிலைப்பாட்டை வலியுறுத்தினார். அதாவது, தமது கடற்படை பிரதேச ஒருமைப்பாட்டையும், இறையாண்மையையும் பாதுகாப்பதற்கு எடுத்த நடவடிக்கை என்றார்.

அப்படித்தான் எடுத்துக்கொண்டாலும், ஒப்பந்தத்தில் குறிப்பாகச் சொல்லப்படுகிறது- சிறிலங்கா அரசு தனது இறையாண்மையைப் பேணலாம். ஆனால், அதேவேளை புலிகள் மீதான எந்த வலிந்து தாக்குதலையும் நடத்தக்கூடாது என்று. சரத்து 1.3 இதைத் தெளிவாகச் சொல்லியதையும் சுட்டிக்காட்டினோம்.

ஒரு வர்த்தகக் கப்பல் மீது தாக்குதல் நடத்தியது மிகவும் மோசமானதொரு நடவடிக்கை. இதை நீங்கள் அரசுத் தரப்பு என்றபடியால் - கடற்படையை ஆதரித்துப் பேசுகிறீர்கள். இது தவறு. இனி இப்படியான நடவடிக்கை நடக்காது பார்த்துக்கொள்ள வேண்டுமென அரச தரப்புக்கு எடுத்துக்கூறினோம். இதனடிப்படையில் ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. மேற்கொண்டும் இதேபோன்ற சம்பவங்கள் நடக்காது தடுப்பதாயின் - கண்காணிப்புக்குழுவுக்குச் சில அதிகாரங்கள் கொடுக்கப்படவேண்டும்.

அதாவது - குறிப்பாக கடற்பிரதேசத்தில் நடக்கின்ற சம்பவங்கள், யுத்த நிறுத்த மீறல்களை - கண்காணிப்புக்குழுவே விசாரித்து, அவர்களாகவே முடிவெடுக்கும்படி - நாம் இருதரப்பும் அவர்களுக்கு அதிகாரங்களைக் கொடுக்கவேண்டும்.

அரசு - தன்னிச்சையாக, தான்தோன்றித்தனமாக, ஒருதலைப்பட்சமாக இவற்றில் தலையிடுவதோ, தாக்குதல் நடாத்துவதோ அல்லது எமது போராளிகளைக் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைப்பதோ இனி ஏற்றுக்கொள்ளமுடியாது.

இனி, இரண்டு தரப்பும் - கண்காணிப்புக்குழுவுடன் ஒரு மாநாட்டைக் கூட்டி - போர்நிறுத்த ஒப்பந்தத்தை மாற்றியமைக்காமல், அது அப்படியே இருக்க - கூடுதலாக சில கடப்பாடுகள், நிபந்தனைகள், வரையறைகளை கண்காணிப்புக்குழுவுக்கு வழங்கி, அவர்களையே முழுமையாக யுத்த நிறுத்தத்தைப் பேணும்படி செய்ய வேண்டுமென நாம் யோசனை தெரிவித்தோம். அதனை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது.

அதன் பிரகாரம் இன்னும் மூன்று வாரத்துக்குள் கண்காணிப்புக்குழு, புலிகள், அரசு, கடற்படையுமாகச் சேர்ந்து கிளிநொச்சியில் ஒரு கூட்டமொன்றை நடத்தி, அதில் சில முக்கியமான முடிவுகளை எடுக்கவுள்ளோம்.

கடலில் நிகழும் பிரச்சினைகள் மட்டுமல்லாமல் - தரையிலும் எல்லைப் புறங்களிலும் கைதுகள், தடுத்துவைத்தல்கள் போன்ற பிரச்சினைகள் ஏற்பட்டால், அவற்றையும் கண்காணிப்புக்குழுவின் பொறுப்பில் விட்டுவிட நாம் கேட்டுள்ளோம். மூன்று வாரத்திற்குள் கூடும் கூட்டத்தில்- அதில் இந்த மேலதிக அதிகாரங்கள் கண்காணிப்புக்குழுவுக்கு வழங்கப்படும். கைதாகும் சிப்பாய்களும் போராளிகளும் கண்காணிப்புக்குழுவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று முடிவும் எடுக்கப்படும்.

### பாதுகாப்பு வலயம்பற்றியும்

உயர்பாதுகாப்பு வலயம் பற்றியும் நாம் பேசினோம். உயர்பாதுகாப்பு வலயத்திற்கு வெளியிலுள்ள பிரதேசங்களில் கூட இராணுவம் இன்னமும் வெளியேறவில்லை. அதைப்பற்றி ஒரு தீர்க்கமான முடிவும் இல்லை. நம்பியாரின் அறிக்கையும் இன்னமும் வரவில்லை. ஆகவே- இந்தப் பிரச்சினை இழுபட்டுச் செல்வதை இனியும் நாம் அனுமதிக்க முடியாது.

யாழ்.குடாநாட்டில் பெருந்தொகையான இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த வீடுகளுக்குத் திரும்ப முடியாமல் அவலப்படுகின்றனர். நீங்கள், இந்தப் பிரச்சினையை வைத்து இழுத்துக்கொண்டிருக்கிறீர்கள் என அரசாங்கத்துக்குச் சொன்னோம்.

### நம்பியாரின் அறிக்கை

நம்பியாரின் அறிக்கை இந்தப் பேச்சுவார்த்தைக்கு முன்னர் வெளியிடப்படுமெனப் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தன. ஆனால் - அந்த அறிக்கையும் வெளிவருவதாகக் காணவில்லை. இந்த அறிக்கை எப்போது வெளிவருமென அமைச்சர் மிலிந்த மொறகொடவைக் கேட்டேன். அவர்தான் நம்பியாருடன் தொடர்புகளை வைத்திருப்பவர்.

இன்னும் 2,3 வாரங்களுள் நிச்சயமாக நம்பியாரின் அறிக்கை வந்துவிடும் என்றும், தாய்லாந்தில் நடைபெறவுள்ள அடுத்த பேச்சுக்களுக்கு முன்னர் அது வெளியிடப்படும் என்றும் அவர் சொன்னார்.

நாம் வேண்டுமென்று பின்போடவில்லை. முன்னர் ஏற்றுக்கொண்டது போல் வீடுகளிலிருந்து இராணுவம் வெளியேறி, அந்த வீடுகளில் மக்களைக் குடியமர்த்த நடவடிக்கைகள் எடுப்போமென்றும் அவரால் சொல்லப்பட்டது.

### தமிழ்க்கைதிகள் விவகாரம்

சிறைகளிலுள்ள தமிழ் அரசியற் கைதிகள் பற்றி ஒவ்வொரு முறையும் பேச்சுக்களில் முக்கியமாகக் கதைப்பது வழக்கம்.

நாங்கள் இங்கு போடும் அழுத்தங்கள் காரணமாகவும் அங்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

கிட்டத்தட்ட ஆயிரம் கைதிகள் ஏற்கனவே இருந்தார்கள். அவர்களில் 900 கைதிகள்வரை பிணையில் விடுதலை செய்யப்பட்டு விட்டனர். பாரதூரமான சம்பவங்களுடன் தொடர்புடைய 100 வரையான கைதிகள் மட்டும் இன்னமும் சிறைகளிலுள்ளனர்.

கைதிகளது மூன்று கோரிக்கைகளின்படி, அவர்களைச் சொந்த இடங்களுக்கு இடமாற்றுவதற்கு உடன் நடவடிக்கை எடுப்பதாக - நாம் கேட்ட போது வாக்குறுதி தரப்பட்டிருக்கிறது.

இரண்டாவதாக- பிணையில் அவர்களை விடுவிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. அரசதரப்பு இதற்கு இணக்கம் தெரிவித்திருக்கிறது.

இதில் சில கைதிகள் பாரதூரமான வழக்குகளுடன் தொடர்புடையவர்கள். சிலருக்குத் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது.

இப்படியான - கைதிகள் விடயத்தில் வழக்குகளைத் துரிதப்படுத்துவதற்காக தாம் நடவடிக்கை எடுப்பதாக பேனாட்டும் மிலிந்த மொறகொடவும் எமக்கு வாக்குறுதி தந்தனர்.

கைதிகளின் உண்ணாவிரதம் எதிர்வரும் மாதம் 17 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. 17 ஆம் திகதிக்கு முன்னர் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாவிட்டால், அவர்கள் மீண்டும் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக நாம் அறிகிறோம். ஆனால், எமக்கு இந்த மூன்று உறுதிப்பாடுகளையும் அரசாங்கம் தந்திருக்கிறது. முழுக் கைதிகளும் வெளியேற வேண்டுமென்பதுதான் எமது விருப்பம்.

இது தொடர்பாக இரண்டு விடயங்களை நாம் எழுப்பினோம். ஒன்று- முழுக்கைதிகளுக்கும் பொதுவான மன்னிப்பு வழங்கினால் என்ன என நாம் கேட்டோம். அதில், அவர்கள் பெரிய அக்கறை காட்டுவதாக இல்லை. ஏனெனில், பொதுமன்னிப்பை சந்திரிகா அம்மையார்தான் தர வேண்டும். அவர், தமிழ்க் கைதிகளை விடுவிப்பார் என நாமும் நம்பவில்லை. அவர்களும் நம்பவில்லை. எனவே- அது கைவிடப்பட்டது.

மற்றையது - பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முற்றாக நீக்க வேண்டுமென நாம் கோரினோம். அதற்கு அவர்கள் - அச்சட்டத்தை மாற்றியமைப்பதற்கான சில யோசனைகள் பற்றித் தாம் பரிசீலனை செய்துவருவதாகத் தெரிவித்தனர்.

இது முக்கிய மனித உரிமைப் பிரச்சினையுடன் சம்பந்தப்பட்டிருப்பதால் - சில முக்கியமான மாறுதல்களைச் செய்வதாக அவர்கள் வாக்குறுதி தந்திருக்கிறார்கள்.

நாளை (இன்று) எமது புனர்வாழ்வு, புனரமைப்புக்கான குழுவான சிறானின் செயற்பாடு பற்றியும், இக்குழுவின் செயற்பாட்டை விஸ்தரிப்பது தொடர்பாகவும், எதிர்வரும் ஜுன் மாதம் 10 ஆம் திகதி ஜப்பானில் நடைபெறவுள்ள உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டில் எத்தகைய கோரிக்கைகள் முன்வைப்பது என்பது பற்றியும் விவாதிக்கவுள்ளோம்.

நாளைய (இன்றைய) அமர்வில்- ஜப்பானின் விசேட தூதுவர் யசுசி அகாஷியும் கலந்துகொள்ளுகின்றார்.

எனவே, நாளை (இன்று) புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்குடியேற்றம் போன்ற அவசரப் பிரச்சினைகள் தொடர்பாகவும் அவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் பற்றியும் , வேலைத் திட்டங்கள் - வெளிநாட்டுதவிகளினால் அவற்றைத் துரிதப்படுத்துவது பற்றியும் பேசப்படும் என்றார் பாலசிங்கம்.

மங்களகரமான திறப்பு விழா

இதுவரை காலமும் முல்லைச்சாலை புதுக்குடியிருப்பில் இயங்கி வந்த எமது ஸ்தாபனமான

பொன்னரசி நகையகம்

19.03.2003 இன்று முதல் தனது சேவையை இல. 76 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஆரம்பிக்கவுள்ளது என்பதை அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

76, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-692)

உரிமையாளர்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 19.03.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.